# இராஜபாளையம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2017-2018

## I. அமைப்பும் நிர்வாகமும்.

**1. எல்லை :**

**அ**). இந்நகராட்சி **1.10.1941** முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக **38641** மக்கள் தொகையுடன் அமைக்கப்பட்டது. இதன் எல்லைக்குள் இராஜபாளையம் இனாம் செட்டிகுளம், சம்மந்தபுரம், வடக்கு வெங்காநல்லூர், புதுப்பாளையம் இனாம் தோப்பு பட்டி, சமுசிகாபுரம், கொத்தன்குளம் கிராமத்தில் ஒரு பகுதி ஆகிய கிராமங்கள் அடங்கி உள்ளன. இந்நகர் 9° 03′ அட்சய ரேகையிலும் 77° 39′ தீர்க்க ரேகையிலும்; கடல் மட்டத்தில் இருந்து 167.64 மீட்டரிலும் அமைந்துள்ளது. இந்நகரின் பரப்பளவு 11.36 ச.கிலோ மீட்டர் ஆகும்.

**ஆ**). இந்நகராட்சி 1.4.1955 முதல் இரண்டாம் நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண் 2552 நாள் 2.12.1974 ல் 1.4.1975 முதல் முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. பின்பு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண் 1073 நாள் 14.12.1989ன் படி தேர்வு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. இறுதியாக அரசாணை எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 2.12.2008 முதல் சிறப்பு நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. இந்நகரம் பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தில் 13.6.1951 முதல் தொழில் நகரமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. நகர் எல்லையில் மாறுதல் ஏதும் இல்லை.

இ) 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 130442 ஆகும். இதில் ஆண் 64763 பெண் 65677 ஆகும். தற்போது இந்நகர் விருதுநகர் மாவட்டத்தில் அதிக மக்கள் தொகை உள்ள நகரமாக திகழ்கிறது.

**ஈ**). இந்நகராட்சி மண்டலங்களாக இன்னும் பிரிக்கப்படவில்லை.

**2. நிர்வாகம் :**

**அ**). நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 135 நாள் 11.6.1996ல் இந்நகராட்சி 42 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நகர் மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 42 அவை கீழே குறிப்பிட்டவாறு உள்ளது.

a)பொது ஆண்கள்- :24(வார்டு எண்) 1,4,6,7.8,9,11,13,14,17,18,19,,21,23,24,25, 28, 29, 32,34,,36,,39, 40,42)

பெண்கள் : 12 (வார்டு எண்) 5,12,20,22,27,30,31,33,35,37,38,41)

b)ஆதி திராவிடர் பழங்குடியினர்

ஆண்கள்: : 4 (வார்டு எண். 3,10,15,16, )

பெண்கள் : 2 (வார்டு எண் 2. 26)

மொத்தம் :42

**ஆ). இந்நகர் மன்றத்திற்கு சாதாரண தேர்தல் 19/10/2011 அன்று தேர்தல் நடைபெற்றது. 25/10/2011ல் புதியதாக 42 நகர்மன்ற உறுப்பினர்கள் பதவியேற்றனர். நகர்மன்றத் தலைவராக திருமதி பி.எஸ்தனலட்சுமி அவர்கள் தேர்தெடுக்கப்பட்டார். நகர்மன்றத் துணைத் தலைவராக** *திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் (வார்டு எண் 9) தேர்ந்தெடுக்கப்பட்டார். 21.11.11ல் நியமனக்குழு தேர்தல் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்றது. நியமனகுழு உறுப்பினராக திரு.ஏ.டி.முருகேசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். 21.11.11ல் வரிவிதிப்பு மேல்முறையீட்டுக் குழுக்கான தேர்தல் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்றது. இதில் திரு.கு.மாரியப்பன், எம்.முருகன், சொ.வேல்முருகன், டி.வனராஜ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 21.11.11ல் ஒப்பந்தக்குழு தேர்தல் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. இதில் திருமதி எஸ்.ஏ.மணிகண்டராஜா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*தேர்தல் ஆணையின் பிரகாரம் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் உள்ளடக்கிய புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் 25,.10.2011ல் அமையப்பட்டது. நகர்மன்றம் 24.10.16ல் முடிவடைந்து அரசாணை எண் 146 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (தேர்தல்) நள் 24.10.16ன்படி தனி அலுவலராக திருமதி.எஸ்.சசிகலா எம்.எஸ்சி நகராட்சி ஆணையாளர் அவர்கள் 25.10.16 முதல் பணிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.*

*அறிக்கையாண்டில் பணியாற்றிய பணியாளர்கள் விவரம் பின்வருமாறு*

**<u>3.அறிக்கையாண்டில் பணிபுரிந்த அலுவலர்களான நகராட்சி ஆணையர்கள்,நகராட்சி பொறியாளர், நகரமைப்பு அலுவலர்கள், மேலாளர்கள், கணக்கர்கள் மற்றும் வருவாய் அலுவலர் விவரம்</u>**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணிபுரிந்த காலம் |
|---|---|---|
| 1 | திருமதி எஸ்.சசிகலா, நகராட்சி ஆணையாளர் | 1.4.17 முதல் 31.3.2018 |
| 2 | திரு.கா.சேர்மக்கனி நகராட்சி பொறியாளர் | 1.4.17 முதல் 31.3.2018 |
| 3 | திரு.எ.சேதுராஜன் நகரமைப்பு அலுவலர் | 1.4.17 முதல் 31.3.2018 |
| 5 | திரு.எ.ராஜாமணி மேலாளர் | 1.4.17 முதல் 31.3.2018 |
| 6 | திரு ஜி.வெங்கசேடன் கணக்கர் | 1.4.17 முதல் 31.3.2018 |
| 7 | திரு.எஸ்.வெங்கடேஸ்வரன் வருவாய் அலுவலர் | 1.4.17 முதல் 31.3.2018 |

**4.மன்றக் கூட்டங்கள் :**

அறிக்கையாண்டில் மாதந்தோறும் ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டங்கள் நடைபெற்றன.

| கூட்டங்கள் | கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| சாதாரணக் கூட்டம் | 12 | 402 |
| அவசரக்கூட்டம் | 5 | |
| சிறப்புக்கூட்டம் | - | |
| மொத்தம் | 17 | |
| கூட்டங்கள் | கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் எண்ணிக்கை |
| ஒப்பந்தக்குழு | - | - |
| நியமனக்குழு | 5 | 5 |
| வரிவிதிப்பு மேல்முறையீடு மற்றும் நிதி குழு | - | - |

**5 மேலாண்மை :**

அறிக்கை ஆண்டில் பணியாளர்கள் ஊதியத்திற்கு 1697.34 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. வரி வசூல் பணிகளை கவனிக்கும் பொருட்டு 1 வருவாய் அலுவலர் 2 வருவாய் ஆய்வாளர்கள் பணி புரிந்து வருகிறார்கள். மேலும், 9 வருவாய் உதவியாளர்கள், 1 அலுவலக உதவியாளர் தொடர்ந்து பணியாற்றினார்கள்.

**பணியிட விபரம் :**

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ 1 | மேலாளர் (வகுப்பு 1ஏ) | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல் முறை ஆணை எண் 40082/88/கே1 நாள் 26.8.89 | 1 |
| 2 | கணக்கர் (வகுப்பு 2) | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல் முறை ஆணை எண் D.Dis.4000/79 | 1 |
| 3 | உதவியாளர் | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல் முறை ஆணை எண் D.Dis.11876/63<1 | 5 |
| 4 | இளநிலை உதவியாளர் | நகராட்சி ஆய்வர் ஆணை எண். 9351.∴62 IMS Proc.No.L.Dis.4688/62 dt.7.4.68 | 15 |
| 5 | தட்டச்சர் | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல் முறை ஆணை எண். 4000/79 | 2 |
| ஆ 1 | வருவாய் அலுவலர் (வகுப்பு 2) | நகராட்சி நிர்வாக இயக்குநர் ந.க. K.Dis.29822/89 நாள் 2.5.89 | 1 |
| 2 | வருவாய் ஆய்வாளர்கள் | நகராட்சி ஆய்வாளர் சென்னை-1. ந.க.எண்.13501/48 நாள்.13.5.48.<br>நகராட்சி ஆய்வாளர் சென்னை-1. ப.மு.42104/49 நாள்.9.8.49. | 1<br>1 |

| | | | |
|---|---|---|---|
| 3 | வருவாய் உதவியாளர்கள் | நகராட்சி ஆய்வர், சென்னை 88673/73 நாள் 10.10.74 | 13 |
| 4 | அலுவலக உதவியாளர் | நகராட்சி ஆய்வாளர் செயல்முறை ஆணை எண்.13642/62 நாள் 13.1.62 | 7 |
| இ 1 | கணணி உதவி திட்ட அமைப்பாளர் | நகராட்சி நிர்வாக ஆனையாளர், சென்னை-5 ஆணை எண்.19543/98/OP1 நாள்.16.6.99 | 1 |
| 2 | கணணி புள்ளி விபரக் குறிப்பாளர் | நகராட்சி நிர்வாக ஆனையாளர், சென்னை-5 ஆணை எண்.37383/99/OP1 நாள்.21.12.99 | 1 |

அறிக்கையாண்டில் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் ஊதியச் செலவு ரு.1741.12 லட்சம் சென்ற ஆண்டு ஊதியச் செலவு .ரு.1008.52 லட்சமாகும்.

ஓய்வு பெற்ற அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர் அவர்களால் 1.10.04 முதல் அரசால் நகராட்சிகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் மாநில நிதிக் குழு நிதியில் பிடித்தம் செய்து அதிலிருந்து ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் பிரயாணப்படி செலவு ரு4.80 லட்சமாகும் சென்ற ஆண்டு செலவு ரு.3.24 லட்சமாகும். அறிக்கையாண்டில் விளம்பர செலவு ரூ.13.20லட்சம் ஆகும். சென்ற ஆண்டு செலவு ரூ.7.25 லட்சம் ஆகும். அறிக்கையாண்டில் தபால் செலவு ரூ.1.26 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு ரூ.1.80லட்சம் ஆகும். அறிக்கையாண்டில் தொலைபேசி கட்டணம் ரூ.1.39 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு செலவு ரூ.2.00 லட்சம் ஆகும். அறிக்கையாண்டில் எழுதுபொருள் மற்றும் அச்சடித்த வகைக்கு ரூ.25.05லட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு செலவு ரூ.24.06 லட்சமாகும்.

**6.வழக்குகள்:**

அறிக்கையாண்டில் வழக்கு செலவு ரூ.6.88 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு செலவு ரூ.0.41 லட்சம்அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை 57 புதிதாக தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 16 அறிக்கையாண்டில் முடிவு செய்யப்பட்டவை 4 ஆண்டிறுதியில் நிலுவை வழக்குகளின் எண்ணிக்கை 69 ஆகும்.

(ரூ.லட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | அனைத்து பணியாளர்களுக்கு ஊதிய செலவு | 1741.12 |
| 2 | பிரயாண செலவு | 4.80 |
| 3 | கணிணி பராமரிப்பு | 0 |
| 4 | விளம்பர செலவு | 13.20 |
| 5 | தபால் செலவு | 1.26 |
| 6 | தொலைபேசி கட்டணம் | 1.38 |
| 7 | எழுது பொருட்கள் - அச்சடித்தமைக்கான செலவு | 25.05 |
| 8 | வழக்கு செலவு | 6.88 |

**7. பொறியியல் பிரிவு பணியிடங்கள்:**

இந்நகராட்சியில் பொறியியல் பணியின் கீழ் நகராட்சி பொறியாளர் நிலை 2 பணியிடம் ஒன்று - சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் செயல்முறை ஆணை எண். 50556/97/எப்3 நாள்.20.10.97 தோற்றுவிக்கப்பட்டுள்ளது. திரு.கா.சேர்மக்கனி நகராட்சி பொறியாளர்அறிக்கை ஆண்டு முழுவதும் பொறியாளராக பணிபுரிந்தார்.

பொறியியல் சார் நிலை பணியின் கீழ் கீழ்க்காணும் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | இளநிலை பொறியாளர் | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 1906 நாள்.28.8.62 | 1 |
| 2 | குடிநீர் பணி மேற்பார்வையாளர் | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண்.32 நாள்.6.1.79 | 1 |
| 3 | குழாய் பொருத்துநர் நிலை 2 | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண்.1972 நாள்.22.12.78 | 1 |
| 4 | ஓட்டுநர் (சாலை உருளை) | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண்.814 நாள்.18.4.67 | 1 |
| 5 | ஓட்டுநர் (லாரி) | நகராட்சி ஆய்வர் சென்னை-1. செயல் முறை ஆணை எண.ஒ.மு.20037/79 நாள்.13.3.1979.<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை-5, செயல்முறை ஆணை எண்.ந.க.32105/97/ஜே3 நாள்.18.11.97 | 1<br>2 |
| 6 | ஓட்டுநர் (ஜீப்) | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண்.1035 நாள்.3.6.81 | 1 |
| 7 | ஓட்டுநர் (டிராக்டர்) | நகராட்சி ஆய்வாளர், சென்னை-1 செயல்முறை ஆணை எண்.மூ.மு.70065/80 நாள்.20.3.80<br>நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை-5 செயல்முறை ஆணை எண். மூ.மு.20431/82/எப்1 நாள்.3.4.82 | 1<br>1 |
| 8 | மின் கம்பியாளர் | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.230 நாள்.11.3.88 | 4 |
| 9 | பணி ஆய்வர் | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண்.1906 நாள்.28.8.62 | 2 |
| 10 | தெரு விளக்கு உதவியாளர் (மின்பணி) | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.112 நாள்.21.2.90<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.70 நாள். | 4<br>1 |
| 11 | காவலர் (பூங்கா) | தலைமை வாக்காளர் அலுவலர் செயல் முறை ஆணை எண்.வ.மு.6398/65 நாள்.2.2.65 | 3 |
| 12 | காவலர் (தலைமை நீரேற்று நிலையம்) | நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல் முறை ஆணை எண்.மூ.மு.20426/82 நாள்.3.4.82 | 3 |
| 13 | குழாய் திருப்புநர் | நகராட்சிகளின் ஆய்வாளர்,சென்னை | 2 |

| | | | |
|---|---|---|---|
| | | செயல்முறை ஆணை எண்.20012/79 நாள்.3.3.79 | |
| 14 | சாலை உருளை துலக்குநர் | | 1 |
| 15 | கேங்கூலி | | 3 |

அறிக்கையாண்டில் பொறியியல் துறையில் குடிநீர் பணியாளர்கள் ஊதியச் செலவு ரூ.43.77 லட்சம். சென்ற ஆண்டு ரூ.38.12 லட்சமாகும்.

**8. சாலைகள் / பாலங்கள் / படகுத்துறைகள் மற்றும் கட்டடங்கள் :**

**(அ). சாலைகள் :**

இந்நகராட்சியின் சாலைகள் விபரம் பின்வருமாறு:

| சாலைகளின் தன்மை | 1.4.2017 அன்று சாலைகளின் நீளம் | கூடுதல் (+) | மாற்றம் (-) | 31.3.2018 அன்று சாலைகளின் நீளம் |
|---|---|---|---|---|
| சிமிண்ட் தளம் | 54.690 | - | - | 53.20 |
| தார் தளம் | 77.790 | - | - | 80.240 |
| கற் சாலை | - | - | - | - |
| மண் சாலை | 6.110 | - | - | 5.230 |
| மற்றவை | - | - | - | - |
| மொத்தம் | 138.590 | - | - | 138.590 |

அறிக்கையாண்டில் வண்டி வாகனாதி வரி மூலம் வரவு இல்லை. ஆக்கிரமிப்பு கட்டணம் ரூ 0.00 லட்சம் ஆகும். சாலைகளின் பராமரிப்பு செலவு 0 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு வரவு ரூ.0.01- லட்சம் ஆகும். சாலைகளின் . சென்ற ஆண்டு சாலை பராமரிப்பு செலவு ரூ.453.95 லட்சம் ஆகும்.

5.00 கி.மீ. நீளமுள்ள தென்காசி சாலை தேசிய நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்படுகிறது.

2.10 கி.மீ. நீளமுள்ள சங்கரன்கோவில் சாலை மாநில நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்படுகிறது.

4.50 கி.மீ. நீளமுள்ள முடங்கியார் ரோடு மாவட்ட நிர்வாகத்தால் பராமரிக்கப்படுகிறது

சாலைகள் அமைக்கத் தேவையான சரல்கள் 9.00 கி.மீ. தொலைவிலுள்ள கொல்லங்கொண்டான் என்ற கிராமத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. நகராட்சிக்குச் சொந்தமான கல் தோண்டி எடுக்கும் இடம் இல்லை.

ஒவ்வொரு ஆண்டும் சாலைகள் பராமரிப்புக்கு திட்டம் தயார் செய்யப்படுகிறது. போக்குவரத்து மிகுந்த சாலைகளின் அகலம் போதுமானதாக இல்லை. இருப்பினும் அவ்வப்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதினாலும், காவல் துறையினரால் போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்படுவதாலும் நெருக்கடி கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகள் குறித்த விதிமுறைகள் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2017–18</u>**

நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2017–18ன் கீழ் இராஜபாளையம் நகராட்சிப் பகுதியில் தார்ச் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.115.00 லட்சத்தில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் ரு.103.00லட்சம் மான்யமாகவும் மீதமுள்ள தொகை ரூ.12.00 லட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பணிகள் தொடர்ந்து நடைபெற்று அனைத்தும் 2018–19ம் வருடத்தில் முடியும் நிலையில் உள்ளது.

**<u>பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2017–2018</u>**

பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.15.00 லட்சம். இதில் பாராளுமன்ற உறுப்பினர் ஒதுக்கீடு நிதி ரூ.15.00 லட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) | பாராளுமன்ற உறுப்பினர்மேம்பாடு நிதி (லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.21 மலையடிப்பட்டி பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 6.00 | 6.00 |
| 2 | வார்டு எண்.39 முகில்வண்ணம் பிள்ளை தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 9.00 | 9.00 |

**<u>சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத்திட்டம் 2017–18</u>**

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஆழ்துளை கிணறுடன் கூடிய மின்மோட்டார் அமைக்கும் பணி மற்றும் தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு மொத்த மதிப்பீடு ரூ.70,00லட்சம். இதில் சட்டமன்ற உறுப்பினர் ஒதுக்கீடு நிதி ரூ.70,00 லட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) | சட்டமன்ற உறுப்பினர்மேம்பாடு நிதி (லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 34 திருவனந்தபுரம் 4வது தெரு பச்சமடத்தில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல | 2.00 | 2.00 |
| 2 | வார்டு எண் 28 இலட்சுமியாபுரம் தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு எண் 35 மங்காபுரம் தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 4 | வார்டு எண் 34 திருவனந்தபுரம் தெரு பச்சமடம் அருகில் மயான கரைக்கு போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 5 | வார்டு எண் 2 கல்யாண சுந்தரனார் ரோடு ஆவாரம்பட்டி வடக்கு தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 6 | வார்டு எண் 29 முனியம்மன் கோயில் தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 7 | வார்டு எண் 14 வள்ளலார் தெரு மேற்கு பகுதி மேலபிள்ளையார் கோயில் தெற்கு பக்கம் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 8 | வார்டு எண் 5 காளியம்மன் கோவில் எதிரில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 9 | வார்டு எண் 6 ஒய்யம்புலி தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 10 | வார்டு எண் 42 பொன்னகரம் தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 11 | வார்டு எண் 19 மாரியம்மன் கோயில் தெரு சஞ்சீவிநாதபுரத்தில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 12 | வார்டு எண் 28 வடக்கு அழகைநகர் அருள்மிகு மாடசாமி திருக்கோவில் அருகில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 13 | வார்டு எண் 23 பூபால்பட்டி தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல | 2.00 | 2.00 |
| 14 | வார்டு எண் 12 சின்ன சுரைக்காய்பட்டி 6வது தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 3.00 | 3.00 |
| 15 | வார்டு எண் 4 வளையாபதி தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 16 | வார்டு எண் 31 சிவகாமியாபுரம் தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 17 | வார்டு எண் 17 செவல்பட்டி தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 18 | வார்டு எண் 9 வணிக வைசியர் தெரு சம்மந்தபுரத்தில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 19 | வார்டு எண் 30 தோப்புபட்டி SC தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 20 | வார்டு எண் 10 சம்மந்தபுரம் தெற்குதெரு மாரியம்மன் கோவில் தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 21 | வார்டு எண் 3 கீழஆவரம்பட்டி பழைய பால்டிப்போ தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல். | 2.00 | 2.00 |
| 22 | வார்டு எண் 7 காமாட்சி அம்மன் கோவில்தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல். | 2.00 | 2.00 |
| 23 | வார்டு எண் 18 கூரைப்பிள்ளையார் கோயில் தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல். | 2.00 | 2.00 |
| 24 | வார்டு எண் 11 சீதக்காதி தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல். | 2.00 | 2.00 |
| 25 | வார்டு எண் 15 அம்மன் பொட்டல் தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல். | 2.00 | 2.00 |

| | | | |
|---|---|---|---|
| 26 | வார்டு எண் 24 பூபதி பேங்க் தெருவில் உள்ள ஜக்கம்மா கோவில் முன்பு போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல். | 2.00 | 2.00 |
| 27 | வார்டு எண் 26 துரைசாமியாபுரம் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 28 | வார்டு எண் 27 மலையடிபட்டி பூ மாரியம்மன் கோவில் தெருவில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 29 | வார்டு எண் 41 ஹவுசிங் போர்டு பகுதியில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 30 | வார்டு எண் 40 பத்மா மருத்துவமனை அருகில் போர்போட்டு சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 31 | அரசு மகப்பேறு மருத்துவமனையில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மின்மோட்டார் 2 எண்ணம் அமைத்தல் பணி | 4.00 | 4.00 |
| 32 | இராஜபாளையம் நகராட்சி அம்பலபுளி பஜார் பகுதி குருசாமி கோவில் அருகில் 90 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் அமைத்தல் பணி | 3.00 | 3.00 |
| 33 | இராஜபாளையம் நகராட்சி சத்திரப்பட்டி சாலை சண்முகர் மில்ஸ் தெரு பகுதியில் தெருவிளக்குகள் அமைத்தல் பணி | 2.00 | 2.00 |

## NULM scheme 2017-18

சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை முதன்மை செயலர் அவர்களின் 26.12.17ம் தேதிய நான்காவது திட்ட அனுமதி கமிடியில் நகராட்சிப் பகுதியில் அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகள் உடனிருப்போர் 50 பேர் தங்க சிறப்பு தங்குமிடம் (Special shelter) ரூ.42.00 லட்சம் செலவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி அரசு மகப்பேறு மருத்துவமனையில் நடை பெற்று வருகிறது. மேலும் இத்திட்டத்தின் கீழ் கட்டிடம் கட்ட ரூ.42.00 லட்சமும், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு ரூ.5.76லட்சமும் மான்யமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

**9)பாலங்கள்**

அ)நகராட்சியிலுள்ள சிறு பாலங்களின் எண்ணிக்கை 260 அறிக்கையாண்டில் சிறுபாலங்கள் கட்டப்படவில்லை.

**ஆ. படகுத்துறை :**

இந்நகராட்சியால் படகுத்துறைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**,இ), கட்டடங்கள் :**

அறிக்கையாண்டில் துறைக்கான கட்டிடங்கள் ஏதும் கட்டப்படவில்லை.

**10. தங்கும் விடுதிகள் :**

இந்நகராட்சியால் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சிக்கு சொந்தமான பயணியர் விடுதி ஒன்று முழுமையான பயன்பாட்டில் இல்லாமல் இருந்ததால் அவை ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்களின் குடியிருப்புகளாக

மாற்றப்பட்டுள்ளன.

நகராட்சிக்கு சொந்தமான சத்திரம் ஏதும் பராமரிக்கப்படவில்லை. மற்றும் அறக்கட்டளை ஏதும் பேணப்படவில்லை.

## II. போக்குவரத்து

**11. தளவாடங்கள் :**

இந்நகராட்சியில் கீழ்காணும் வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.:

| | | | |
|---|---|---|---|
| லாரிகள் | 4 | ஈப்பு | 2 |
| சிறிய லாரி | 3 | மெட்டாடர்வேன் | 1 |
| டிராக்டர்கள் | 4 | ஆட்டோ | 1 |
| டிரெய்லர் | - | ரோடு ரோலர் | 1 |
| பவர்டில்லர் | - | JCB | 1 |
| டம்பர் பிளேசர் | 3 | | |

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள வாகனங்களுக்கு அறிக்கையாண்டில் எரிபொருள் மற்றும் பழுதுபார்த்த வகைக்கு ரூ.58.94 லட்சம் செலவிடப்பட்டுள்ளது

**12. தெருவிளக்கு :**

**அடிப்படை வசதி அபிவிருத்தி திட்டம் :**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 69 நாள் 4.5.1990ல் வழி காட்டியுள்ள வழி முறைகளின் படியும் இந்நகர் மன்றத் தீர்மானம் எண் 901 நாள் 17.10.02ன்படியும் இந்நகர் மன்ற தீர்மான எண் 572 நாள் 14.8.2003ன்படி திருநெல்வேலி ஆகாஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தார் அவர்களுக்கு தெரு விளக்குகளை பராமரிப்பு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. நான்கு மின் கம்பியாளர்களும் நான்கு உதவியாளர்களும் இந்நகராட்சியிலுள்ள இதர அத்தியாவசிய பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் மின் கட்டணச் செலவு ரூ.236.49லட்சம்ஆகும். சென்ற ஆண்டு மின்கட்டணம் ரூ263.55லட்சம் ஆகும். அறிக்கையாண்டில் பராமரிப்பு செலவு ரூ.119.60 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.69.67 லட்சம் ஆகும்.

**நகராட்சியால் பராமரிக்கப்படும் தெரு விளக்குகள் (31.03.2017) பின்வருமாறு :**

| | விளக்குகளின் வகை | 31.03.2017 அன்று உள்ளவை |
|---|---|---|
| 1 | 1x40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 2702 எண்ணம் |
| 2 | 1x70 வாட்ஸ் சோடியம் விளக்குகள் | 1554 எண்ணம் |
| 3 | 1x250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் | 489 எண்ணம் |
| 4 | 400 வாட்ஸ் மெட்டல் ஹெலாய்டு விளக்குகள் | 110 எண்ணம் |
| 5 | 250 வாட்ஸ் மெட்டல் ஹெலாய்டு விளக்குகள் | 108 எண்ணம் |
| 6 | T5 96 வாட்ஸ் விளக்குகள் | 102 எண்ணம் |
| 7 | T5 28 வாட்ஸ் விளக்குகள் | 1051 எண்ணம் |
| | மொத்தம் | 6116 எண்ணம் |

## III. கல்வி

**ஆரம்பக் கல்வி :**

**13. கல்வி கற்றல் வசதிகள்**

நகராட்சி பகுதியில் பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கை 18240 இதில் ஆண் 9680 பெண் 8560 ஆகும்.

அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் 42 தனியார் ஆரம்ப பள்ளிகளும் 2 நகராட்சி ஆரம்ப பள்ளிகளும் . அரசு மேல்நிலைப் பள்ளி 2. அரசு மான்யம் பெறும் தனியார் மேல்நிலைப் பள்ளிகள் 5

1 நகராட்சி நடுநிலைப்பள்ளியும் இருந்தன. புதிதாக ஆரம்ப பள்ளி துவக்கப்படவில்லை.

**14. அமைவிடமும் - தளவாடமும் :**

நகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பள்ளிகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. நகராட்சி பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்புக்காக அறிக்கையாண்டில் ஏதும் செலவிடப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டிடங்கள் யாவும் போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ளதாக அமைந்துள்ளன.

**15. கல்வி நிதி :**

அறிக்கையாண்டில் கல்வி வரி வசூல் ரூ.48.53 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு ரூ.37.54 லட்சம் ஆகும். வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் 3வது மற்றும் 8வது வார்டு பள்ளிகளுக்காக அறிக்கையாண்டில் ரு.0.37 லட்சம் வாடகையாகவும், மின்கட்டணம் ரூ.0.14 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

நகராட்சியிலிருந்து செலவு ஏதும் செய்யப்படவில்லை

**16. சிறப்பு பள்ளிகள் /பொது நூலகங்கள் :**

இந்நகராட்சியால் விசேச பாட சாலைகளும் பொது நூல் நிலையங்களும் நடத்தப்பட வில்லை. ஆனால் திரு. பி.ஏ.சி. ராமசாமி ராஜா கல்வி தர்ம ஸ்தாபனத்தாரால் ஆண்களுக்கான ஒரு தொழில் கல்வி பள்ளி நடத்தப்பட்டு அதில் இயந்திர இயல் அமைப்பியல் மின் இயல், நூற்பு இயல், முதலிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப் பட்டு வருகிறது. இது போன்று பெண்களுக்கு என்.ஏ. மஞ்சம்மாள் பாலிடெக்னிக் ஒன்று புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. ராஜுக்கள் கலைக் கல்லூரி ஒன்று தோற்றுவிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும் ஸ்ரீராவ்பகதூர் தர்மராஜா கல்வி ஸ்தாபனத்தால் பெண்களுக்கான கலைக் கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது. மேலும் ஸ்ரீராவ்பகதூர் தர்மராஜா கல்வி ஸ்தாபனத்தால் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சி கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது.

முன்னாள் ஒரிஸா மாநில ஆளுநரும், சென்னை மாநில முதல்வருமான காலஞ்சென்ற திரு. பி.எஸ் குமாரசாமிராஜா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட காந்தி கலை மன்றம் என்ற பெயரில் இயங்கும் நூல் நிலையமும் மாவட்ட நூலக ஆணைக்குழுவால் நடத்தப்படும் பொது நூல் நிலையமும் மக்களுக்கு நல்ல முறையில் பயன்பட்டு வருகின்றன. இதுவரை ஒவ்வொரு ஆண்டும் காந்தி கலை மன்ற நூல் நிலைத்திற்கு ரூ.5000/- நகராட்சியிலிருந்து உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியால் நூல் நிலைய வரி விதிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் நூல் நிலைய வரியாக ரூ.68.08 லட்சம் வசூலிக்கப்பட்டது. சென்ற ஆண்டு வசூல் ரூ58.55லட்சம்- அறிக்கையாண்டில் மாவட்ட நூலக ஆணை குழுவிற்கு செலுத்தப்பட்ட நூலகவரி ரூ.68.08லட்சம் ஆகும். அறிக்கையாண்டு முடிய செலுத்த வேண்டிய நூல்நிலைய வரி நிலுவை ஏதும் இல்லை.

**17.புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் :**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள இரு ஆரம்ப பள்ளிகளிலும் ஒரு நடுநிலைப் பள்ளியிலும் நகராட்சியின் பொறுப்பில் 1.12.1982 முதல் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திலும் ஓர் அமைப்பாளர் ஒரு சமையலர், மற்றும் ஒரு சமையல் உதவியாளர் பணிபுரிந்து வருகின்றனர்.

அறிக்கையாண்டில் 5+9 வயது பிரிவில் பயன்பெற்ற மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கை 44880ம் 10+14 வயது பிரிவில் பயன்பெற்றோர் மொத்த எண்ணிக்கை 17600 ஆகும். அறிக்கையாண்டில் பெறப்பட்ட அரசு மான்யம் எதுவும் பெறப்படவில்லை. 1.5.12 முதல் அ.ஆ.எண் மான்யம் கிளை கருவூலம் மூலம் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு பெறப்பட்ட மான்யம் 80250
சமூகநலம் மற்றும் சத்துணவு திட்ட துறையின் 19.5.06ம் எண் 50 அரசாணையின்படி புரட்சி தலைவர் எம்ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் சத்துணவு உட்கொள்ளும் 5+9 மற்றும் 10+14 வயது பயனாளிக்கு வாரம் 5 முறை முட்டையும் மற்ற 2 நாட்களில் உருளைக்கிழங்கு கொண்டைக்கடலை பச்சைபயிறு வழங்கப்பட்டு வருகிறது.∴

**18.ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்துணவு மையம் :**

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துணவு மையங்கள் 32 இந்நகரில் செயல்பட்டு வருகின்றன. இவைகள் செயலாக்கம் ஊட்டச்சத்து அலுவலரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## IV. பொது சுகாதாரம்

### 19. மருத்துவ உதவி :

**(அ).** நகர சபையால் மருத்துவமனை ஏதும் பராமரிக்கப்படவில்லை. தாய் சேய் நல விடுதி ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகரின் மத்தியில் அரசினரால் பராமரிக்கப்பட்டு வந்த மருத்துவமனை பெருகி வரும் மக்களின் தேவைக்கேற்ப இந்நகர் எல்லையை அடுத்துள்ள தெற்கு வெங்காநல்லூர் ஊராட்சி எல்லைக்கு உட்பட்ட இடத்தில் தென்காசி ரோட்டில் 80 படுக்கைகளுடன் நல்ல முறையில் இயங்கி வருகிறது. நகருக்கு மத்தியில் 50 படுக்கைகளுடன் கூடிய மகப்பேறு மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது. இந்த மகப்பேறு மருத்துவமனையும் அரசினர் மருத்துவமனையும் இந்நகர் பொது மக்களுக்கு பெரிதும் பயன்பட்டு வருகிறது.

### 20. அமைப்பும் பணியாளர்களும் :

பொது சுகாதார துறை அரசாணை எண் 719 நாள்.18.12.1941ல் நகர்நல அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் நகர்நல அலுவலர் பணியிடம் அரசால் பூர்த்தி செய்யப்படாமல் காலியாக உள்ளது. 1.4.2014 முதல் அறிக்கையாண்டு முடிய நகராட்சி ஆணையர் அவர்கள் நகர்நல அலுவலர் பொறுப்பில் இருந்துள்ளார். பொது சுகாதார பணியாளர்களுக்காக அறிக்கையாண்டில் ரூ1202.18 லட்சம் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு செலவு ரூ668.32லட்சம் ஆகும். நகரில் 24 நகர் பிரிவுகளில் துப்புரவு பணி தனியார் மயமாக்கப்பட்டதால் அறிக்கையாண்டில் பணியாளர்களின் ஊதியச்செலவு குறைந்துள்ளது. அறிக்கையாண்டில் தனியார்மயமாக்கல் செலவு ரூ 192.00 லட்சம் ஆகும். இதர பணியாளர்கள் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சுகாதார ஆய்வர் | 1.பொது சுகாதார துறை அரசாணை எண்.119 நாள்.18.2.1941 | 3 |
| | | 2. பொது சுகாதார இயக்குனர், சென்னை, செயல்முறை ஆணை எண்.நி.மு.428/62 நாள்.3.12.1962 | 1 |
| | | 3.பொது சுகாதார துறை கூடுதல் இயக்குநர் செயல் முறை ஆணை எண்.2000/நுஏஜஜ/72 நாள்.24.2.73 | 1 |
| | | 4. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.238 நாள்.14.9.94 | 4 |
| 2 | சுகாதார மேற்பார்வையாளர் | 1.பொது சுகாதாரத்துறை அரசாணை எண்.119 நாள்.18.2.1941<br>2.பொது சுகாதாரத் துறை இயக்குநர், சென்னை, செயல்முறை ஆணை எண்.ப.மு.10935/குஏஜஜ/74 நாள்.5.6.1974 | 11 |

| | | | |
|---|---|---|---|
| 4 | ஓட்டுநர் (டிராக்டர்) | பொது சுகாதாரத் துறை இயக்குநர், சென்னை, செயல்முறை ஆணை எண்.நி.மு.53/நு/65 நாள்.29.165 | 2 |
| 5 | ஓட்டுநர் (லாரி) | 1.நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.205 நாள்.26.2.90<br>2.நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5, செயல்முறை ஆணை எண்.மூ.மு.70115/90து1 நாள்.21.6.91<br>3. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5, செயல்முறை ஆணை எண்.ந.க.எண்.32105/97/து3 நாள்.18.11.97 | 2<br>4<br>6 |
| 6 | துலக்குநர் | 1.பொது சுகாதார துறை கூடுதல் இயக்குநர் செயல் முறை ஆணை எண்.மூ.மு.205683/நுஏஜஜ நாள்.18.11.72<br>2.நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.205 நாள்.26.2.90 | 4 |
| 7 | துப்புரவு பணியாளர்கள் | 1.பொது சுகாதாரத் துறை அரசாணை எண்.719.நாள்.18.2.1941<br>பொது சுகாதாரத்துறை இயக்குநர் சுற்றறிக்கை எண்.46640/இ/41-2 நாள்.28.5.1942<br>2.பொது சுகாதாரத் துறை அரசாணை எண்.2716. நாள்.21.12.1972<br>3. பொது சுகாதாரத் துறை அரசாணை எண்.2469 நாள்.1.10.1973<br>4. பொது சுகாதாரத் துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண்.30242/76/நு7.நாள்.31.3.1977 சி1-5269-06 1.6.09 | 119<br>29<br>1<br>3<br>57<br>97 |

**21.நல மையங்கள் (Health Posts):**

அரசாணை எண் 764 (சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை) நாள் 31.3.1988ன் படி இந்நகராட்சியில் Out Reach Services Scheme என்ற திட்டம், 1.6.1988 முதல் துவக்கப்பட்டு முற்றிலும் மத்திய அரசு நிதி உதவியால் இயங்கி வந்தது. அரசாணை 1046 (சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை) நாள் 23.7.1993ன் படி 5வது இந்திய மக்கள் தொகைத் திட்டம் என பெயர் மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. நகர சுகாதார செவிலியர் என பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இந்நகரில் 1.7.93 முதல் மூன்று நகர் நல மையங்கள் ஒரு போஸ்ட் பார்டம் சென்டர் இயங்கி வருகின்றன. 7.7.15 முதல் நகர அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 2 இயங்கி வருகிறது. 2 மருத்துவ அலுவலர்கள் டெப்டேசனில் வேலைபார்க்கிறார்கள். இந்நகர் நல மையங்களில் 3 பெண் மருத்துவ அலுவர்கள், 3 பெண் நலப் பார்வையாளர்கள், 3 கம்ப்யூட்டர் கம் கிளார்க்குகள், 14 நகர சுகாதார செவிலியர், 2 வகுப்பு, IV பணியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் 3 பெண் மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது 4 பகுதி சுகாதார செவிலியர் பணியிடங்கள் இருந்தன. 4 பகுதி சுகாதார செவிலியர் பணியிடங்கள் இயங்கி வருகின்றன. அறிக்கையாண்டில்

இத்திட்டத்தின் கீழ் ரூ 67..55லட்சம் செலவிடப் பட்டுள்ளது. சென்ற ஆண்டு செலவு ரூ.59.26 ஆகும்.

| | Sanction | Position |
|---|---|---|
| பெண் மருத்துவ அலுவலர் | | 2 deputation |
| பெண் நல பார்வையாளர் | 4 | 3 |
| பல்நோக்கு சுகாதாரப் பணி | 14 | 13 |
| வகுப்பு 4 மகளிர் | 2 | 2 |

**குறிக்கோள் :**

1. தாய் சேய் நலம் கவனிப்பு
2. பிரசவம் பார்த்தல்
3. கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல்
4. மருத்துவ முறையில் கருக்கலைப்பு செய்தல்
5. தற்காலிக கருத்தடை சாதனங்கள் வழங்குதல்
6. முதல் உதவி மற்றும் சில காயங்களுக்கு மருத்துவம் செய்தல்
7. தொற்று நோய்களான காச நோய், மலேரியா, தொழுநோய் போன்றவைகளை கண்டறிந்து குணப்படுத்துதல்
8. தாய்மார்களுக்கு பேறுகால முன்கவனிப்பு செய்தல், குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு பின் கவனிப்பு மற்றும் குழந்தைகள் கவனிப்பு செய்தல், குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு தடுப்பூசி போடுதல்
9. குழந்தைகள் இறப்பு விகிதத்தை குறைத்தல்
10. இனப்பெருக்க நோயினை கண்டறிந்து அதன் தொடர்பான இறப்பினை குறைத்தல்
11. அனைத்து நோய்களையும் கண்காணித்தல்.

**22) போலியோ சிறப்பு முகாம் :**

போலியோ சிறப்பு முகாம் 28.02.18 (ம) 11.04.18 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இதில் 5 வயதிற்குட்பட்ட 10259 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது.

**23) வாழ்வொளி திட்டம் :**

இந்நகராட்சி பகுதியிலுள்ள பள்ளி குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்டு குழந்தைகளிடம் குறைபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டு ஐந்து முதல் ஆறு வயதுக்குட்பட்ட 3652 குழந்தைகளுக்கு D.T. தடுப்பூசியும் 10 வயது 2042 குழந்தைகளுக்கு டி.டி தடுப்பூசியும் பதினாறு வயது மாணவ மாணவியர் 1684 பேருக்கு T.T. தடுபபூசியும் போடப்பட்டது.

**24. பிறப்பு விகிதமும் பேறுசார் கவனிப்பும் :**

**(அ) பிறப்பு விகிதம்:**

இந்நகராட்சியில் 9 துப்புரவு ஆய்வர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பிறப்பு இறப்புகளை தத்தம் பகுதி அலுவலகத்தில் பதிவு செய்து வருகிறார்கள்.

அறிக்கையாண்டில் மொத்தம் 3679 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டது. பிறப்பு விகிதம் 28.20 சதவீதம் ஆகும். அரசு மருத்துவமனைகளில் நிகழ்ந்த 1930 பிறப்புகளும், தனியார் மருத்துவமனைகளில் நிகழ்ந்த 1738 பிறப்புகளும் இதர 9 பிறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 4224 ஆகும். சென்ற ஆண்டு பிறப்பு விகிதம் 32.14 சதவீதம் ஆகும்.

**(ஆ). தாய் சேய் நல மையம்**

இந்நகராட்சியில் 16 படுக்கைகள் கொண்ட பி.எஸ். குமாரசாமிராஜா ஞாபகார்த்த தாய் சேய் நல விடுதி ஒன்று நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் 22.12.1963 முதல் இந்நகராட்சியால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பணியாளர்கள் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர் நீ.மு.எண்.74420/74/நு/ஏஐஐ நாள்.9.12.74 | 1 |
| 2 | நலப்பார்வையாளர் | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை.மு.மு.330/83/ப.தொ நாள.12.4.85 | 1 |
| 3 | மகப்பேறு உதவியாளர் | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண்.178/42 நாள்.29.12.42<br>பொது சுகாதாரத்துறை அரசாணை எண்.650 நாள்.2.3.1948<br>பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண்.534/45 நாள்.23.2.1949<br>பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண்.53/49 நாள்.19.6.1950<br>பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண்.264/49/நு/ளு2 நாள்.19.6.1950<br>பொது சுகாதாரத்துறை அரசாணை எண்.408 நாள்.23.2.1965 | 1<br>1<br>1<br>1<br>1<br>2 |
| 4 | மகப்பேறு ஆயா | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை எண்.178/42 நாள்.29.12.42<br>பொது சுகாதாரத்துறை அரசாணை எண்.650 நாள்.2.3.1948 | 7 |
| 5 | அலுவலக உதவியாளர் | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை.மு.மு.330/83/ப.தொ நாள.12.4.85 | 1 |
| 6 | இரவு காவலர் | பொது சுகாதாரத்துறை இயக்குநர் செயல்முறை ஆணை.மு.மு.330/83/ப.தொ நாள.12.4.85 | 1 |

பிரசவம் பார்த்தல், கர்ப்பிணிகள் கவனிப்பு குழந்தைகள் கவனிப்பு முதலிய பணிகள் புரிந்து வருகின்றனர்.

**25. இறப்பு விகிதம்:**

அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 1042 ஆகும். இறப்பு விகிதம் 7.99 சதவீதம் ஆகும். சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 1103 சென்ற ஆண்டு இறப்பு விகிதம் 8.45 சதவீதம் ஆகும்.

26. **தொற்றுநோய்கள் - கொள்ளை நோய்கள்**

அறிக்கையாண்டில் காலரா, தொற்று நோய்கள் இந்நகரில் ஏற்படவில்லை. காலரா மற்றும் தொற்று நோய்கள் வராமலிருக்க தேவையான தடுப்பு மருந்தகள் போதிய அளவு கையிருப்பு வைத்துக் கொள்ளப்பட்டது. அரசாங்க மருத்துவ மனைக்குள் 3 படுக்கைகள் கொண்ட தொற்று நோய் விடுதி ஒன்று நிரந்தரமாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது

கொசு தொல்லையை ஒழிக்க புழு கொல்லி மருந்து ஒவ்வொரு வார்டுகளிலும் 16 தினக்கூலி பணியாளர்களை கொண்டு தெளிப்பான் மூலம் கொசு உற்பத்தியாகும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்கள், சாக்கடை தொட்டிகள் , வாறுகால்கள் ஆகிய இடங்களில் தெளிக்கப்பட்டு வருகிறது. பிரத்தியோகமான கொசு ஒழிப்புத் திட்டம் அமுல் படுத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் மூலம் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அரசிற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் டெங்கு காய்ச்சல் மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் அரசு வழிகாட்டுதல்படி நடைபெற்று வருகிறது.2014-2015ம் ஆண்டில் இந்நகர் பகுதியில் டெங்கு காய்ச்சல் வரப்பெற்றது.அதனை தடுக்க DBC பணியாளர்கள் பொது சுகாதார களப் பணியாளர்கள். நலப் பார்வையாளர்கள். மருத்துவ அலுவலர். சுகாதார ஆய்வர்கள். பகுதி செவிலியர்களை கொண்டு தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு டெங்கு காய்ச்சல் முற்றிலும் ஒழிக்கப்பட்டது.

**27. துப்புரவு பணிகள் :**

(அ). சுகாதாரப் பிரிவில் மொத்தம் அனுமதிக்கப்பட்ட 9 பிரிவுகளில் 6 சுகாதார ஆய்வாளர்களும், 11 பொது சுகாதார மேற்பார்வையாளர்களும், 8 ஓட்டுநர்களும், 1 துலக்குநர்களும், 180 நிரந்தர துப்புரவு பணியாளர்களும் பணியாற்றினார்கள். துப்புரவு பணிக்காக 2 லாரிகள், 3 டிரெய்லருடன் கூடிய டிராக்டர்கள், 3டம்பர் பிளேசர் லாரிகள் மற்றும் 1 காம்பாக்டர் வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் மொத்தம் 580 இருக்கைகள் கொண்ட 62 நவீன கழிப்பறைகளும், 8 சிறு நீர் கழிப்பிடங்களும் இருந்தது. நகரிலுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 46190 இதில் கழிப்பறை வசதி உள்ளவைகள் 28350 ஆகும். 1993ம் ஆண்டு மனிதக் கழிவுகளை அகற்ற பணியாளர்களை அமர்த்துவதையும் உலர் கழிப்பிடங்கள் கட்டுவதையும் தடை செய்யும் சட்டத்தின் கீழ் (மையச்சட்டம் 46/1993) மனிதக் கழிவுகளை அகற்ற பணியாளர்களை அமர்த்துவது குற்றம் என நகராட்சியிலிருந்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சுகாதார வளாகம்:**

**அ**. நகரில் 6 இடங்களில் ஒருங்கினைந்த சுகாதார வளாகங்கள் உள்ளன

1. பூபால்பட்டி தெரு 2
2. சிங்கராஜாகோட்டை தெரு 1
3. சோமையாபுரம் தெரு 1

4. ஆர்.சி.சர்ச் தெரு 1
5. முனியம்மன்பொட்டல் தெரு 1

**ஆ. வாம்பே**

வாம்பே (Vambay) திட்டத்தின் கீழ் கீழ்கண்ட 4 இடங்களில் சுகாதார வளாகங்கள் உள்ளன.

1.பேருந்து நிலையம் கீழ்புறம்

2.சின்னச்சுரைக்காய்பட்டி அண்ணாநகர்

3.கீழ ஆவரம்பட்டி

4.பி.எஸ்.கே நகர் தாய்சேய் நல விடுதி அருகில்

துப்பரவு பணியாளர்கள் நாள் தோறும் காலையில் 5 மணிநேரமும் மாலையில் 3 மணி நேரமுமாக மொத்தம் 8 மணி நேரம் பணி செய்கிறார்கள். அவர்களுக்கு அனைத்து ஞாயிற்று கிழமைகளில் விடுமுறை கொடுக்கப்பட்டுள்ளது. பிரதான சாலைகள், பேருந்து நிலையம், பொது கழிப்பிடங்கள் முதலிய முக்கியமான இடங்களை தினமும் சுத்தம் செய்யப்படுகின்றன. துப்பரவு அனைவருக்கும் இலவசமாக காலனி, சீருடைகளும், சோப்புகளும் அறிக்கையாண்டில் வழங்கப்பட்டது.

**28.திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல்:**

சுற்றுப் புறச் சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986ன் கீழ் மத்திய அரசு, நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 என்ற விதிகளை இயற்றியுள்ளது. இவ்விதிகளின்படி அனைத்து நகராட்சிகளும், குப்பைகளை சேகரித்தல், பிரித்தல், பாதுகாத்தல், குப்பைக் கிடங்குக்கு அனுப்புதல், மற்றும் முடிவு செய்தல் ஆகிய பணிகளுக்கு நகராட்சிகள் முற்றிலும் பொறுப்பாக்கப்படுகின்றன.

மேற்கண்ட விதிகளின்படி, (1). நகராட்சி எல்லைக்குள் குப்பைகளை கண்ட இடத்தில் எறியக்கூடாது. (2). வீடுகள் தோறும் சென்று குப்பைகளை சேகரிக்க வேண்டும். (3). வீடுகள் தோறும் சென்று குப்பைகளை சேகரிப்போர் குப்பைகள் சேகரிக்க வருகிறார்கள் என்பதைத் தெரிவிக்க ஒலி எழுப்ப வேண்டும். (4). குறிப்பிட்ட நேரங்களில் குப்பைகள் நகராட்சி குப்பை சேகரிக்கும் பணியாளரால் சேகரிக்கப்பட வேண்டும். (5). உணவு விடுதிகள் அலுவலகங்களில் மற்றும் வணிகப்பகுதிகளில் சென்று அங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ள கூடைகளிலிருந்து குப்பைகளை அகற்ற வேண்டும். (6).இறைச்சிக்கடைகள் மற்றும் மீன் கடைகள் மற்றும் காய்கறிக்கடைகளிலிருந்து வெளியேறும் மக்கும் குப்பைகளைத் தனியாக சேகரிக்க வேண்டும். (7). மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத இரும்பு, பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி கலந்த குப்பைகளை கலக்காமல் தனித்தனியாக பிரித்து சேகரித்து வாங்க வேண்டும். (8).

மருத்துவக் கழிவுகள் இதர கழிவுகளுடன் கலக்காமல் தனியாக பாதுகாப்பாக சேகரிக்கப்பட்டு தனியாக அழிக்க வேண்டும். இவ்விதிகளின்படி மருத்துவக் கழிவுகளை உருவாக்குவோரே அவற்றை அழிப்பதற்கும் முழுப்பொறுப்பாகிறார்கள். (9). குப்பைகள் எக்காரணம் கொண்டும் எரிக்கப்படலாகாது. (10). தோட்டக்கழிவுகள் மற்றும் கட்டுமான கழிவுகள் கலக்கப்படாமல் தனித்தனியாக சேகரிக்கப்பட்டு அப்புறப்படுத்த வேண்டும்.

இந்நகராட்சியிலுள்ள 42 வார்டுகளில் பொது மக்கள் தாங்களே முன் வந்து பச்சை வண்ணக் கூடைகளில் மக்கும் குப்பைகளையும் நீல வண்ணக்கூடைகளில் மக்காத பிளாஸ்டிக் இரும்பு மற்றும் கண்ணாடிக் கழிவுகளை சேர்த்து காலை 7 மணி முதல் தங்கள் வீட்டு வாசலில் வைத்து விடுகிறார்கள்.

குப்பை அள்ளும்/சேகரிக்கும் துப்புரவுப் பணியாளர்கள் தாங்கள் தெருக்களில் வருவதைத் தெரிவிக்க குப்பை குப்பை என உரக்கக் கத்தியோ அசல் விசில் மூலமாக சத்தமிட்டோ தெரிவிக்கிறார்கள். துப்புரவுப் பணியாளர்கள் தங்களுடன் கொண்டுவரும் தள்ளுவண்டிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைக்காக தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளதால் குப்பைகளை தனித்தனியாக பிரித்து வாங்கிக் கொள்கிறார்கள். தெருக்கள் சுத்தமாக உள்ளன. பொதுமக்கள் தெருக்களில் அல்லது வாறுகால்களில் குப்பைகளை எறிவதை நிறுத்தியுள்ளார்கள். திடக்கழிவு மேலாண்மை பற்றி அனைத்து வார்டுகளுக்கும் நகர்நல அலுவலர்(பொ) மற்றும் சுகாதார ஆய்வர்கள் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதால் நகரின் பொது சுகாதாரம் வெகுவாக சீரடைந்துள்ளது.

மேற்கண்ட விதிகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கான கூட்டங்களில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல், பிளாஸ்டிக் பொருட்கள் இதர கழிவுகளுடன் சேர்க்கப்படுவதால் ஏற்படும் தீமைகள் ஆகியவற்றை விளக்கி பொதுமக்களுக்கு இவற்றைத் தெரியப்படுத்துமாறு இந்நகராட்சி கேட்டுக் கொண்டுள்ளது. பிளாஸ்டிக்குகள் மண்ணில் சேர்வதால் அவை பலநூறு ஆண்டுகள் மண்ணுடன் மக்காமல் மழைநீரை நிலத்தடி நீருடன் சேரவிடாமல் வருங்காலங்களில் பெரும் குடிநீர் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் பிளாஸ்டிக் பொருட்களை கால்நடைகள் உண்பதால் அவைகள் அகால மரணமடைகின்றன எனவும் பிளாஸ்டிக் எரிக்கப்படுவதால் டயாக்ஸின் எனப்படும் கொடிய நச்சு காற்றில் கலந்து அதனால் புற்று நோய் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் மக்களுக்கு பல்வேறு கூட்டங்களில் எடுத்துரைக்கப்பட்டது.

பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மனிதச் சங்கிலி, மாணவர் பேரணி போன்ற ஏற்பாடுகளும் செய்யப்பட்டு கேபிள் டிவி மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் திடக் கழிவு மேலாண்மை பற்றி விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன. மாணவர்களிடையேவிழிப்புணர்ச்சி ஏற்படுத்த ECO Club எனப்படும் சுற்றுப்புறச் சூழல் சங்கம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. இச்சங்கத்திலுள்ள மாணவர்கள் தாங்களாகவே முன்வந்து தங்கள் வீடு பள்ளி தெருக்களில் ஆங்காங்கு தென்படும் பிளாஸ்டிக்குகளை அப்பறப்படுத்துவது மட்டுமன்றி பிரதான சாலைகளின் இருபக்கமும் மண்ணை அள்ளி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

நகரிலுள்ள ஒவ்வொரு கடைகள் மற்றும் வணிக ஸ்தலங்களுக்கும் நேரில் சென்று சுகாதார ஆய்வர்கள் வற்புறுத்துவதால் கடை உரிமையாளர்கள் தாங்கள் வெளியேற்றும் கழிவுகளை குப்பைக் கூடைகளில் வைத்திருந்து துப்புறவு பணியாளர்களிடம் கொடுக்கிறார்கள். இதனால் பிரதான சாலைகளில் குப்பைகள் எறியப்படுவது குறைந்துள்ளது.

மேலும் திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2016ன்படி இந்நகராட்சியால் துணை விதிகள் இயற்றப்பட்டு மன்றத் தீர்மானம் எண்.53 நாள்13.1.2017 நிறைவேற்றப்பட்டு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டு துணை விதிகளை பின்பற்றாத வணிக நிறுவனங்களுக்கு சேவை கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

நகரிலுள்ள அனைத்து தனியார் மருத்துவர்களும் நகராட்சிக்கு அழைக்கப்பட்டு அவர்களின் மருத்துவக் கழிவுகளை அவர்களே பொறுப்பாக எரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு தற்சமயம் தனியார் நிறுவனம் மூலம் சேகரிக்கப்பட்டு எடுத்து செல்லப்பட்டு காரியாப்பட்டி அருகே பாதுகாப்பாக எரிக்கப்படுகிறது

மேலும் அரசாணை எண் 69 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநர் வழங்கல் துறை நாள்.4.5.98ல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி இந்நகரில் ஏற்கெனவே பணிபுரியும் துப்புறவுப்பணியாளர்களின் பணிகளுக்கு பாதகம் ஏதும் ஏற்படாவன்னம் இந்நகரிலுள்ள 24 வார்டுகள் மற்றும் பழைய பேருந்து நிலையம் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**29.கலவை உரம்:**

அ.இராஜபாளையம் நகராட்சி எல்லைக்கு கிழக்கில் (சஞ்சீவிமலைக்கு கிழக்கில்) புதுப்பாளையம் கிராமம் புல எண்கள் 2,29/1,29/3 பகுதியில் அமைந்துள்ள அரசு புறம்போக்கு இடங்களை நகராட்சிக்கு தரம் மாற்றி பட்டா வழங்கக் கோரியும் புல எண்கள் 29,2a,2b,28,1/2 பகுதியில் அடங்கும் தனியார் பட்டா நிலங்களை கிரையம் மூலம் இந்நகராட்சிக்கு புதிய உரக்கிடங்கு அமைப்பதற்கு தனி நபர் பேச்சு வார்த்தை மூலம் பெற்றுத் தரக் கோரியும் நகர் மன்றத் தீமானம் எண். 447 நாள் 8.9.04ல் தீர்மானிக்கப்பட்டு உரிய கருத்துரு இவ்வலுவலக ந.க.5280/1999/எப்2 நாள்.16.6.2000 கடிதத்தில் வருவாய்த்துறைக்கு அனுப்பப்பட்டது. விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தமது 31.5.2001ம் தேதிய ந.க.59276/2000/அ4 எண் செயலாணை கடிதத்தில், இராசபாளையம் வட்டம், புதுப்பாளையம் கிராமம் புல எண்கள் 2,29 29/3ல் உள்ள மேய்க்கால் புறம் போக்கு நிலத்தில் 2.58 ஹெக்டேர் (6.37 ஏக்கர்) உரக்கிடங்கு அமைக்க இந்நகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. தனியாருக்கு பாத்தியமான புல எண்கள் 1/2 பகுதி 29/2A1, 2A2, 29/2B1,B2, 28 ல் 13.98 ஏக்கர் பரப்புள்ள பட்டா இடங்களை தனி நபர் பேச்சு வார்த்தை மூலம் பெறப்பட்டு வட்டாட்சியர் அவர்களின் 11.6.06ம் தேதிய ந.க.அ3.15.01.04ன்படி நகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா மாறுதலும் செய்யப்பட்டு விட்டது. மேலும் உரக்கிடங்கும் அமைக்கப்பட்டு கலவை உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வந்தது.

**ஆ). ஆபத்தானதும் அருவருக்கத்தக்கதுமான வாணிபங்கள்**

இந்நகரில் நடைபெறும் ஆபத்தானதும் அருவருக்கத்தக்கதுமான வணிகங்கள் மற்றும் தொழில்கள் அனைத்தையும் சுகாதார ஆய்வாளர்களால் பார்வையிடப்பட்டு குறைகள் இருந்தால் நிவர்த்தி செய்யப்பட்டு உரிமங்கள் வழங்கப்பட்டது. இதற்காக அறிக்கையாண்டில் கட்டணமாக ரூ.7.96 லட்சம் வசூல் செய்யப்பட்டது. சென்ற வசூல் செய்யப்பட்ட கட்டணம் ரூ.7.72 லட்சம் இவைகளை முறைப்படுத்த துணை விதிகள் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

**(இ). திருவிழாக்கள் சந்தைகள்:**

இந்நகரில் பிரசுரம் செய்யப்பட்ட திருவிழாக்கள் ஏதும் இல்லை. அறிக்கையாண்டில் சித்திரை மாத பிறப்பன்று சித்திரை திருவிழாவிற்கு தேவையான சுகாதார வசதிகள் இந்நகராட்சியால் செய்து கொடுக்கப்பட்டது. யாத்திரை வரி அல்லது கட்டணம் வசூல் செய்வது இந்நகராட்சியில் அமுலில் இல்லை.

**30. குடிநீர் விநியோகம்**

**குடிநீர் அபிவிருத்தி திட்டம்**

இந்நகர் மக்களுக்கு தேவையான குடிநீர் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரமான அய்யனார் கோவில் அருகே முடங்கியாற்றின் குறுக்கே அணைகட்டி நீர் எடுக்கப்பட்டு, கோடை குடிநீர் தேக்கத்தில் சேமிக்கப்பட்டு, கோடை குடிநீர் தேக்கத்தின் மூலம் நகருக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1974ம் ஆண்டு ரூ. 75.15 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செய்து முடிக்கப்பட்டு இந்நகராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டது. அய்யனார் கோவில் அருவிக்கு மேலாக ஆற்றுப்படுகையில் கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து மழைக்காலங்களில் வரும் தண்ணீரை இரண்டு அடி விட்டமுள்ள குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுமார் 40 மில்லியன் கன கொள்ளளவு உள்ள குடிநீர் தேக்கத்தில் தேக்கப்படுகிறது. தேக்கப்பட்ட தண்ணீர் 5 லட்சம் காலன் கொள்ளளவு கொண்ட நான்கு சுத்திகரிப்பு தொட்டிகளுக்கு குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுத்திகரிப்பு செய்து குளோரினேசன் செய்து 15.50 கி.மீ கொள்ளளவு நீளமுள்ள குழாய்கள் வழியாக நகரிலுள்ள 7 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தன்னோட்டத்தால் வழியாக 209 பொதுக்குழாய்களுக்கும் 26991 குழாய் இணைப்புகளுக்கும் நாள் ஒன்றுக்கு 85 லட்சம் லிட்டர் குடிநீர் 133.50கி.மீ. நீளமுள்ள தன்னோட்ட பிரதான குழாய் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. இது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 72 லிட்டர் ஆகும்.

உத்தேசமாக 1000 லிட்டர் குடிநீருக்கு ரூ.313- செலவாகிறது. விநியோகிக்கப்படும் குடிநீர் எல்லா சோதனைகளிலும் திருப்தியாக இருந்தது என்று கிண்டியிலுள்ள தலைமை குடிநீர் பகுப்பாய்வாளர் தெரிவித்துள்ளார்.

உபபிரதான குழாய்கள் பதிக்காத இடங்களுக்கு 4லாரிகள், ஒரு டிராக்டரில் உள்ள டேங்கர் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வறிக்கையாண்டில் நகரில் பல்வேறு பகுதிகளில் மொத்தம் 681 ஆழ்துளைக் கிணறுகள் இயங்கி வருகின்றன.

மேலும் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஆதாரமான பழைய கோடைகால நீர் தேக்கத்தில் தற்போது முழு கொள்ளளவான 20 அடி நீர் இருப்பும் உள்ளது. புதிய கோடைகால நீர் தேக்கத்தல் 9அடி நீர் இருப்பும் உள்ளது. தற்போது கோடைகால நீர் தேக்க இருப்பு மற்றும் தலைமை நீர்ரேற்று நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 28 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் 11 எண்ணம் திறந்த வெளி கிணறுகளிலிருந்து நாள்தோறும் 9.50 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு 5 நாட்கள் இடைவெளியில் 72 எல்.பி.சி.டி வீதம் குடிநீர் விநியோகம் தங்கு தடையின்றி செய்யப்பட்டு வருகின்றது.

**குடிநீர் அபிவிருத்தி திட்டம் :**

இந்நகரின் கூடுதல் குடிநீர் தேவையை கருதி தாமிரபரணி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு கூட்டு குடிநீர் திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு கூட்டு குடிநீர் திட்டமாக இராஜபாளையம், சங்கரன்கோவில், புளியங்குடி, சிவகாசி, மற்றும் திருத்தங்கல் ஆகிய ஐந்து நகராட்சிகளுக்கான தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.543.20 கோடி மதிப்பீட்டில் (இராஜபாளையம் நகராட்சிக்கான திட்ட நிதி 173.70 கோடியில் அம்ருத் திட்டம் 2015–2016ன் கீழ்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.6 நாள்.30.01.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு எம்/எஸ். அன்னை இன்ப்ரா டெவலப்பர்ஸ் ஈரோடு நிறுவனத்தாருக்கு 6.12.2017ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை உயர் மட்ட நீர்தேக்கத் தொட்டிகள் 9 எண்ணம், 1 எண்ணம் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணிகள் ஜூன் 2020ம் ஆண்டில் முழுமையாக முடிக்கப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. திட்டம் பயனுக்கு வந்த பின்னர் இராஜபாளையம் நகராட்சி நகர் முழுவதும் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 எல்.பி.சி.டி வீதம் தினமும் குடிநீர் வழங்கப்படும்.

**குடிநீர் குழாய் இணைப்பு வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் விவரம்**

வரையறுக்கப்பட்ட குடிநீர் கட்டணம் ஒரு குழாய்க்கு மாதம் ரூ50 வீதமும் குடிநீர் மிகுவரியாக ஆண்டு ஒன்றிற்கு ரூ.12 வீதமும் மீட்டர் ரேட்டில் உபயோகத்திற்கு ஒவ்வொரு ஆயிரம் லிட்டருக்கும் ரூ.5- வீதமும், வீட்டு உபயோகமில்லா இணைப்புகளுக்கு 1000 லிட்டருக்கு ரூ10- வீதமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஆயினும் இதில் குறைந்த பட்ச கட்டணமாக ஆண்டிற்கு ஒரு குடியிருப்புக்கு ரூ.50- வீதமும் மற்ற உபயோகத்திற்கு ரூ.100-வீதமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அதிகரித்துவரும் செலவினத்தை கருத்திற்கொண்டும், குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு பெறும் கடன் தொகையை திருப்பி செலுத்துவதை கருத்திற்கொண்டும் வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்குரிய காப்புத்தொகை ரூ.5000 ஆகவும், குடிநீர் கட்டணத்தை குறைந்தபட்சம் ரூ.50 ஆகவும், வீட்டு உபயோகம் இல்லாத குடிநீர் இணைப்புகளுக்கு காப்புத்தொகை ரூ.10000 ஆகவும், குடிநீர் கட்டணத்தை குறைந்தபட்சம் ரூ.100 ஆகவும் உயர்த்த இந்நகர்மன்றத்தின் 9.8.03 நாளிட்ட தீர்மானம் எண்.735ல் முடிவு செய்யப்பட்டு 1.4.2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும், துணை விதிகளுக்கான வரைவு திருத்தம் ஒப்புதல் செய்யக்கோரி இந்நகராட்சியின் 9.10.2002 தேதிய ந.க.7377-2002-இ2 எண் கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளரின் 30.5.2003 தேதிய செயல்முறை ஆணை மூ.மூ.எண்.95588-99-கு2 எண் கடிதத்தில் பொது அங்கீகாரம் வழங்கப்பட்டது. பின்னர் உத்தேச குடிநீர் கட்டண உயர்வின்பேரில் ஆட்சேபனை கோரி விருதுநகர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலகம் மூலம் 26.8.2003 அன்று நாளிதழ் விளம்பரம் செய்யப்பட்டது. ஆட்சேபணை ஏதும் வரப்பெறாததால் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.∴

அறிக்கையாண்டில் குடிநீர் கட்டணம் வசூல் ரூ. 162.66 லட்சம் ஆகும். சென்ற ஆண்டு வரவு ரு.184.28 லட்சம் ஆகும். குடிநீர் குழாய் இணைப்பு பழுது பார்த்தல் மற்றும் இதர இனங்களில் வரவு ரூ.5.22 லட்சம். சென்ற ஆண்டு ரூ1.00லட்சம் வருவாய் கிடைத்தது. பணியாளர்கள் செலவு ரூ.**43.77** லட்சமாகும்.

**குடிநீர் இணைப்புகள்:**

அறிக்கையாண்டின் இறுதியில் மொத்த இணைப்புகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| வீட்டு இணைப்புகள் | 26561 |
| தொழிற்சாலை இணைப்புகள் | 110 |
| வணிக இணைப்புகள | 320 |
| மொத்தம் | 26991 |

மீட்டர் அளவுக் கருவிகள் அனைத்தும் வீட்டு உரிமையாளர்களால் செலவில் பொருத்தப்பட்டதாகும்.

**மழை நீர் சேகரிப்பு:**

தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்துவிட்டதால் நிலத்தடி நீரின் சேமிப்பு பெருக வீணாகும் மழை நீரை சேகரிக்க தமிழ்நாடு அரசு திட்டம் ஒன்றை தயாரித்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேமிப்பு கட்டாயமாக்கப்பட்டு தமிழ்நாடு நகராட்சி கட்டிட விதிகளில் உரிய திருத்தம் செய்து நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண்.128 நாள் 11.10.2002 மற்றும் அரசாணை எண்.168 நாள்.11.11.2002 வெளியிடப்பட்டது. இந்த திருத்தத்தின்படி கட்டிட உரிமையாளர்கள்.∴

உபயோகிப்பாளர் 15.7.2015ஆம் தேதிக்குள் (மழைக்காலம் ஆரம்பமாகுமுன்) தனது சொந்த செலவிலும் பொறுப்பிலும் அரசு வழிகாட்டுதல்படி மழைநீர் சேகரிப்பு கட்டாயம் ஏற்படுத்த வேண்டும். தவறினால் நகராட்சியே அத்தகைய மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்தி அதற்கான செலவு தொகையை உரிமையாளரிடமிருந்து வசூல் செய்ய வழிவகுக்கப்பட்டது.

இராஜபாளையம் நகராட்சி பகுதியில் மழைநீர் சேகரிப்பு அவசியம் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி மாணவ மாணவியர் ஊர்வலம். பொதுமக்கள் மன்றத்தலைவர், துணைத்தலைவர் உறுப்பினர்கள் ஆகியோர் ஊர்வலங்களில் கலந்து கொண்டனர். சுவர்விளம்பரங்கள், வரைப்படங்கள், விளம்பரப்பலகைகள் நகரின் பல பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டன. தொலைக்காட்சி வாயிலாகவும் துண்டுபிரசுரங்கள் வாயிலாகவும் விழிப்புணர்வு விளம்பரம் செய்யப்பட்டது. நகரின் அனைத்துப் பகுதிகளிலும் அரசு அலுவலக கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு உறுதிமொழி வாசகங்கள் எழுதப்பட்டன. ஒவ்வொரு வரி விதிப்பு எண்களிலும் மழைநீர் சேமிப்பின் பயன்களை பொது மக்களிடம் எடுத்துரைத்து மழை நீர் சேகரிப்பு ஏற்படுத்தப்பட்டது.

இதன் பயனாக நகராட்சிப் பகுதியிலுள்ள 45023 கட்டிடங்களில் தனியார் குடியிருப்புகள் 33776 வணிக கட்டிடங்கள் 4950 தொழிற் சாலை 532 ஆக மொத்தம் 39258 கட்டிடங்களில் உரிமையாளர்களாகவே முன்வந்து மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்தப்பட்டது. எஞ்சியுள்ள கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தி திறந்த வெளிகளிலும் அதாவது சாலை ஓரங்கள், குளம், குட்டைகள் ஆகியவற்றில் மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்தவும் அரசினரால் ஆணையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**31 பாதாள சாக்கடைத்திட்டம் :**

இந்நகரில் பாதாள சாக்கடை திட்டம் (கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கழிவு நீர் உந்து நிலையம் (ம) நீரேற்று நிலையம் ) அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை ரு.55.86 கோடிக்கு தயாரிக்கப்பட்டு வாரியத் தலைமை அலுவலகத்திலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளதாகவும் 25.4.08 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற தொழில் நுட்ப நிலைக்குழுக் கூட்டத்தில் தல ஆய்வு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் தொழில் நுட்ப நிலைக்குழு தல ஆய்வு செய்த பின் விரிவான திட்ட அறிக்கை திருத்தம் செய்து இறுதித் திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என விருதுநகர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் அவர்களின் 21.1.09ம் தேதிய ந.க.12.இவஅ1.கொ இராசபாளையம்.பா.சா.தி 2009 எண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு தொடர்ந்துநடவடிக்கையில் இருந்து வருகிறது.

**32 பொது சுகாதாரம் - பாதுகாப்பு நடவடிக்கை :**

**(அ).** சுகாதாரப் பணிகள், துணை இயக்குநர், சிவகாசி அவர்களின் 7.5.2002 ஆம் தேதிய ந.க.எண்.111/சி5/2002ல் கண்ட உத்திரவின்படி இந்நகராட்சியில் ஐ.எஸ்.ஐ. முத்திரையில்லாத தண்ணீர் பாக்கெட்டுகள் தண்ணீர் பாட்டில்கள் தண்ணீர் கேன்கள் ஆகியவை விற்கப்படுகிறதா என உணவு ஆய்வர் மற்றும் சுகாதார ஆய்வர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து வருகிறார்கள்.

**(ஆ).**நகராட்சிப் பகுதியில் தீயணைப்பு நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. அலைந்து திரியும் பன்றிகள் மற்றும் நாய்கள் கட்டுப்படுத்தி தொடர்ந்து அழிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## V - வருவாய் ஈட்டும் இனங்கள்

சஞ்சீவி மலைக்கருகில் துப்புரவு பணியாளர்களுக்காக 75 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு வாடகையின்றி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**33. போக்கு வரத்துக்கள் :**

இந்நகராட்சியால் பேருந்து போக்குவரத்து மற்றும் இதர போக்குவரத்து ஏதும் நடத்தப்படவில்லை. போக்குவரத்து பேருந்துகள் அனைத்தும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு விரைவு போக்கு வரத்துக் கழகங்கள் மற்றும் தனியார் துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது. இந்நகரைச்சுற்றியுள்ள கிராமங்களுக்கும் பிரதான ஊர்களுக்கும் 320 பேருந்து வண்டி தொடர்புகள் உள்ளன. நகரில் புகைவண்டி நிலையம் ஒன்று உள்ளது.

**34. சந்தைகள், பேருந்து நிலையம், ஆடு அடிக்கும் இடம் முதலியன :**

வருகை ஆண்டில் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை, சைக்கிள் நிறுத்துமிடம் ஆகியன பொது மக்களின் நன்மையை கருதி குத்தகைக்கு விடப்பட்டது. பேருந்துநிலையம், ஆடு அடிக்கும் இடம் மற்றும் **கோடை குடிநீர் தேக்கத்திலுள்ள அதனை சார்ந்த பகுதிகளில் உள்ள மரங்களின் மேல் மகசூல் பலனை அனுபவிக்கும் உரிமம்** ஏலம் விடுதல் முதலியவைகளில் இருந்து இந்நகராட்சிக்கு கடந்த மூன்று வருடங்களில் கிடைக்கப் பெற்ற வருமான விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2015-2016 | 2016-17 | 2017-18 |
|---|---|---|---|
| புதிய பேருந்து நிலையத்தில் சைக்கிள் நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 540750 | 567788 | 598000 |
| புதிய பேருந்து நிலைய பேருந்து கட்டணம் | 1125000 | 1181250 | 1240313 |
| பதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை | 447100 | 469455 | 492928 |

| | | | |
|---|---|---|---|
| ஆடு அடிக்குமிடம் | 54600 | 57330 | 66200 |
| கோடை குடிநீர் தேக்கத்திலுள்ள அதனை சார்ந்த பகுதிகளில் உள்ள மரங்களின் மேல் மகசூல் பலனை அனுபவிக்கும் உரிமம் | 179708 | 179708 | 189000 |
| புதிய பேருந்து நிலையத்தில் தலை சுமையாக இனிப்பு, முறுக்கு விற்கும் உரிமம் | ஏலம் கேட்க ஒருவரும் முன்வரவில்லை | ஏலம் கேட்க ஒருவரும் முன்வரவில்லை | ஏலம் கேட்க ஒருவரும் முன்வரவில்லை |
| புதிய பழைய பேருந்து நிலையத்தில் தட்டில் பூ விற்கும் உரிமம் | ஏலம் கேட்க ஒருவரும் முன்வரவில்லை | ஏலம் கேட்க ஒருவரும் முன்வரவில்லை | ஏலம் கேட்க ஒருவரும் முன்வரவில்லை |

**(அ). சந்தை :**

இந்நகராட்சியால் வாரச் சந்தையோ, தினசரி சந்தையோ நடத்தப்படவில்லை. ஆனால் நகரில் பிரதான இடத்தில் ஏ.கே.டி தர்மராஜா கல்வி ஸ்தாபனத்தால் நடத்தப்படும் தனியார் வாரச் சந்தை உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இச்சந்தைக்கு நகராட்சியால் உரிமம் வழங்கப்படுகிறது. அறிக்கையாண்டில் மேற்படி சந்தை நடத்த உரிமம் கட்டணமாக 46.50 வசூலிக்கப்பட்டுள்ளது.

**(ஆ). வண்டிப்பேட்டை :**

நகர் மன்றத்தால் வண்டிப்பேட்டை நிர்வகிக்கப்படவில்லை. தனியார் வண்டிப்பேட்டைகள் இல்லை.

**(இ). பேருந்து நிலையம் :**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தை சேர்ந்தாற் போல் தென்பக்கம் உள்ள இராஜபாளையம் கிராமம் சர்வே நம்பர் 265/2 ல் சுமார் 35 சென்ட் ஊரணி புறம் போக்கு நிலத்தை பேருந்து நிலைய அபிவிருத்திற்காக இந்நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்து கொடுக்கும்படி 31.3.76 ஆம் தேதிய 42 எண் தீர்மானத்தின் மூலம் வருவாய்த்துறைக்கு அனுப்பப்பட்டு வருவாய்த்துறை அரசாணை (நிலை) எண் 1589 நாள் 22.8.88ன் படி மேற்படி நிலத்தை 99 வருட குத்தகையாக எடுத்து நகராட்சி அனுபவித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. மேற்படி இடத்தில் புதிதாக சைக்கிள் நிறுத்துமிடம் மற்றும் வணிக வளாகம் ரூ. 30 லட்சம் செலவில் கட்டப்பட்டது.

நகர சபையால் பேருந்து நிலையம் ஒன்றும் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையத்திற்குள் MUDF திட்டத்தின் கீழ் 34 கடைகள் கட்டப்பட்டுள்ளன. இவை தவிர சைவ உணவு விடுதி 1, வடக்கு உள்பக்கம் 14 கடைகள், வடக்கு வெளிப்பக்கம் 15 கடைகள் தென் பக்கம் 11 கடைகள், மேல் பக்கம் 3 கடைகள் மற்றும் மாடியில் 1 கடை பொது மக்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கும் விதத்தில் அமைக்கப்பட்டு இருக்கிறது. இவைகள் தவிர தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு

2 அறைகளும் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. பேருந்து நிலையத்தில் போதுமான வசதிகள் செய்ததின் மூலம் 24.2.79 க்கு பின் 'சி' வகுப்பு பேருந்து நிலையமாக உயர்த்தப்பட்டு, 21.2.79 ஆம் தேதிய டி.எண்.13729/சி2/70 ஆம் எண்ணிட்ட இராமநாதபுரம் மண்டல போக்குவரத்து அதிகாரி அவர்களின் உத்தரவுப்படி பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்து ஒன்றுக்கு ரூ.2 வீதம் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. உள்துறை (போக்குவரத்து VII) அரசாணை எண்.175 நாள்.4.3.2002 ஆணையில் 11.3.2002 முதல் சி கிளாஸ் பேருந்து நிலையங்களில் பேருந்து கட்டணம் ரூ.2 லிருந்து ரூ.8 ஆக உயர்த்தி வசூல் செய்ய ஆணையிட்டுள்ளது. உயர்த்தப்பட்ட கட்டணத்தின்படி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**புதிய புறநகர் பேருந்து நிலையம் :**

இராஜபாளையம் நகராட்சிப் பகுதியில் தற்பொழுது இயங்கி வரும் பேருந்து நிலையம் நகரின் மையப் பகுதியல் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமான இடத்தில் அமைந்துள்ளது. எனவே போக்குவரத்து நெரிசலையும் அதனால் ஏற்படும் விபத்துக்களையும் சமாளிக்கும் பொருட்டு இந்நகரிலிருந்து சங்கரன் கோவில் செல்லும் சாலையில் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ள நகராட்சிக்குப் பாத்தியமான புதுப்பாளையம் கிராமம் சர்வே எண்கள் 273,274ல் உள்ள 7.71 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

**(ஈ). ஆடு அடிக்கும் இடம்**

நகரில் தெற்கு எல்லையில் உள்ள நகராட்சி மாட்டுக் கொட்டகையில் ஆடு அடிக்கும் இடம் உள்ளது. அது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. உதவி கால்நடை அதிகாரி ஆடுகளை பரிசோதித்து, விற்பனை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அடிக்கப்படும் ஆடு ஒன்றிற்கு கட்டணமாக
ரூ.30 வசூல் செய்ய அறிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் ரூ66200-வருமானம் கிடைத்துள்ளது. சென்ற ஆண்டு வரவு ரூ.57330/-ஆகும்.

**(உ). இதர கடைகளும் காலி இடங்களும்**

முடங்கியார் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 6 கடைகள் **இடியும் தருவாயில் உள்ளது. அதனை புதுப்பிக்க நகராட்சி பொறியாளர் பிரிவு மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பழைய / புதிய பேருந்து நிலைய கடைகள் மூலம் அறிக்கை ஆண்டில் வரவு ரூ.93,00,680/– ஆகும்.**

நகராட்சியால் கட்டப்பட்ட சத்துணவுக்கூடங்கள் 28ல் 27 சத்துணவுக்கூடங்களும், 1 சத்துணவுக் கூடத்தின் ஒரு பகுதியும் ஒருங்கிணைக்கப்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்து அலுவலகத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வரவு ரூ.42456/– ஆகும்.

ஒரு சத்துணவுக்கூடத்தின் மற்றொரு பகுதி கால் நடை பராமரிப்புத்துறைக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வாடகை வரவு ரூ.**2136/-** அம்பலப்புளி பஜார் தெற்கு காவல் நிலையம் பின் புறம் உள்ள நகராட்சிக்கு பாத்தியப்பட்ட காலியிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் வரவு ரூ.6600/-

**(ஊ). கட்டணக்கழிப்பிடங்கள் :**

பழைய (ம) புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டணக் கழிப்பறை**கள்** மற்றும் (1) ஜவஹா் மைதானம் (2)ஆா்.சி.சா்ச் தெரு (3) டி.பி.மில்ஸ் சாலை ஆகிய இடங்களில் நகராட்சி கட்டணக்கழிப்பறைகள் பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் இவற்றின் மூலம் வரவு **2299191/-** ஆகும்.

**(ஏ). தொழில் நிறுவனங்களும், தொழிற்சாலைகளும் :**

அறிக்கையாண்டில் சுகாதார அலுவலா்களால் தொழிற் சாலைகளும், தொழில் நிறுவனங்களும் முறையாக பாா்வையிடப்பட்டது.

**35. பூங்காக்கள் பராமரித்தல் :**

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டுத் திடல் மற்றும் திறந்தவெளி (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 4(2) கிழ் உத்தேச பட்டியலும் நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை அரசாணை எண்.139 நாள் 13.10.2016 வாயிலாக பிரிவு 513) கீழ் திருத்தப்பட்டியலும் வெளியிடப்பட்டது. சென்ற ஆண்டு நிா்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன்படி பட்டியல் பின்வருமாறு:

| வரிசை எண் | பூங்கா/ விளையாட்டுத் திடல்/ திறந்த வெளியின் பெயா் | அமைவிடம் | பரப்பளவு (சதுரஅடி) | உரிமையாளா் பெயா் |
|---|---|---|---|---|
| பூங்காக்கள்: | | | | |
| 1 | பிளஸ்கே பூங்கா | ந.பி.எண்.13 பு.எண்.415/A/B1 | 0.06093 | நகா்மன்றம் |
| 2 | சுபாஸ்சந்திரபோஸ் பூங்கா | ந.பி.எண்.7 பு.எண்.774/17/B | 0.20473 | நகா்மன்றம் |
| 3 | ஆா்.ஆா்.நகா் பூங்கா எண்.1 | ந.பி.எண். பு.எண்.19/1/59 | 666.5 | நகா்மன்றம் |
| 4 | ஆா்.ஆா்.நகா் பூங்கா எண்.2 | ந.பி.எண். பு.எண்.19/2 | 687.21 | நகா்மன்றம் |
| 5 | ஆா்.ஆா்.நகா் பூங்கா எண்.3 | ந.பி.எண். பு.எண்.19/60 | 438.50 | நகா்மன்றம் |
| 6 | ஆா்.ஆா்.நகா் பூங்கா எண்.4 | ந.பி.எண். பு.எண்.19/2 | 625.40 | நகா்மன்றம் |
| 7 | தமிழ்நாடு வீட்டுக் குடியிருப்பு சத்திரப்பட்டி ரோடு | ந.பி.எண். பு.எண்.125/2 | 891.00 | நகா்மன்றம் |
| 8 | கணபதியா*புரம் பூங்கா* | *டி.எஸ் எண் 21/1.29* | *632.00* | நகா்மன்றம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | ஆர்.ஆர்.நகர் பிரிவு பூங்கா | டி.எஸ் எண் | 0.1561335 | |
| 10 | ஆர்.ஆர்.நகர் பிரிவு பூங்கா I அனுமதியற்ற மனைப்பிரிவில் வரன்முறைப்படுத்தல் திட்டம் | டி.எஸ் எண் | 0.05421 | |
| 11 | ஆர்.ஆர்.நகர் பிரிவு பூங்கா II | டி.எஸ் எண் | 0.12927 | |
| 12 | அழகாபுரி ரோடு பிரிவு அபிவிருத்தி | டி.எஸ் எண் | 0.18348 | |
| விளையாட்டுத் திடல் | | | | |
| 13 | எஸ்.எம்.உயர்நிலைப் பள்ளி | ந.பி.எண்.12 பு.எண்.241/1,2பி 242/1,2ஏ?2பி,244,245/டி2 ஏ | 5.00436 | சேத்தூர் சேவக பாண்டியன் அரசு மேநிலைப்பள்ளி |
| 14 | ஏ.கே.டி.தர்மராஜா பெண்கள் மேனிலைப் பள்ளி | ந.பி.எண்.12 பு.எண்.241 | 0.22651 | ஏ.கே.டி.தர்மராஜா கல்வி அறக்கட்டளை |
| 15 | நாடார் மேனிலைப் பள்ளி | ந.பி.எண்.14 பு.எண்.236 | 0.16000 | தலைவர், நாடார் மேனிலைப்பள்ளி |
| 16 | பி.ஏ.சி.எம்.மேனிலைப் பள்ளி | ந.பி.எண்.20 பு.எண்.137-140 | 5.23440 | பி.ஆர்.சுப்பிரமணியராஜா பி.எஸ்.கே.நகர் |
| 17 | எஸ்.எஸ் மேனிலைப் பள்ளி | ந.பி.எண்.12 பு.எண்.228 | 2.24394 | சேத்தூர் சேவக பாண்டியன் அரசு மேனிலைப்பள்ளி |
| 18 | ரயில்வே கிழக்குப் பக்கம் | ந.பி.எண்.12 பு.எண். | 2.32670 | பெருமாள் செட்டி மற்றும் சிலர் |
| திறந்த வெளி | | | | |
| 19 | சுபாஷ்சந்திரபோஸ் மைதானம் | ந.பி.எண்.6 பு.எண்.77 | 11.36590 | அரசு |
| 20 | ஜவஹர் மைதானம் | ந.பி.எண்.17 பு.எண்.415 | 1.30928 | அரசு |
| 21 | பொன்விழா மைதானம் | ந.பி.எண்.9 பு.எண்.140 | 0.33977 | எஸ்.என்.நாராயணராஜா, செயலர், காந்தி சாலை மண்டபம் |
| 22 | பண்ணையார் கிளப் | ந.பி.எண்.9 பு.எண்.138/6,8 | 0.16988 | ஆர்.வி.ராமசுந்தரம் பிள்ளை, பண்ணையார் |

**36. நில மேம்பாடு**

**(அ). நகரமைப்பு சட்டம் :**

1971ம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 11(1) கீழ் அமைக்கப்பட்ட உள்ளூர் திட்டக் குழுவில் அறிக்கையாண்டில் 24.10.2016 வரை நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் 1)திரு.எஸ்.ஆர்.ராதாகிருஷ்ணராஜா 2)திரு.ந.பாஸ்கரன் 3)திரு.கே.கதிரேசன் 4)திருமதி.எல்.பழனிக்குரு 5)திருமதி சீ.ஸ்ரீதேவி ஆகியோர்கள் அறிக்கையாண்டு முழுவதும் உள்ளூர்திட்டக் குழு உறுப்பினர்களாக இருந்தனர்.நகராட்சிநிர்வாகம் மற்றும்

*குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 146 நாள் 24.10.16ன்படி நகராட்சி ஆணையாளர்களை தனி அலுவலராக நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளதால் 25.10.16 முதல் நகராட்சி ஆணையாளர் அவர்கள் தலைமையில் திட்ட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.*

அறிக்கையாண்டில் நடைபெற்ற உள்ளூர் திட்டக்குழு கூட்டங்களின் எண்ணிக்கை 3 இதில் முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 91 ஆகும்

திரு.சேதுராஜன் 1.4.2017 முதல் 31.3.2018 வரை இந்நகராட்சியின் நகரமைப்பு அலுவலராக பணிபுரிந்து வந்தார்கள். மேலும் 3 நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தில் திருமதி.க.ப.சிவசங்கரி 1.4.2017 முதல் 31.3.2018 வரையிலும் திரு.சீ.ராஜேந்திரன் 1.4.2017 முதல் 31.3.2018 வரையிலும் மற்றும் திரு.ஐ.பொன்னுச்சாமி 1.4.2017 முதல் 31.3.2018 வரையிலும் பணிபுரிந்து வருகிறார்கள் 1 உதவியாளரும் தொடர்ந்து பணியாற்றினார்கள்.

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதி ஆணை எண் மற்றும் நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நகரமைப்பு அலுவலர் நிலை I | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, செயல் முறை ஆணை எண்.ந.க. 66582/89/டிபி1 நாள் 11.3.91 | 1 |
| 2 | நகரமைப்பு ஆய்வர் | சுகாதாரத்துறை அரசாணை எண்.3450 நாள்.26.1.1956 | 2 |
| 3 | நகரமைப்பு ஆய்வர் | அரசாணை எண் (4D) *எண் 1, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்-17.01.2013* | 1 |

இந்நகராட்சியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 7 அங்கீகரிக்கப்ட்ட நகரமைப்புத் திட்டங்களும் 6 வரைவு நிலையில் உள்ள விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளது. அரசினரால் ஏற்கனவே இந்நகருக்கு அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டம் தற்பொழுது புதுநிலைப்படுத்தப்பட்டு அரசின் இறுதி ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**I அரசினரால் அங்கீகரிக்கப்ட்ட நகரமைப்புத் திட்டங்கள்:**

1. இரயில்வே நிலையம் பிரதேச நகரமைப்புத் திட்டம்
2. இரயில்வே நிலையம் பகுதி இருப்புப்பாதைக்கு கீழ் புறம் உள்ள நகரமைப்புத் திட்டம்
3. புதுப்பாளையம் நகரமைப்புத்திடடம் எண் I
4. புதுப்பாளையம் நகரமைப்புத்திட்டம் எண் II
5. புதுப்பாளையம் நகரமைப்புத்திட்டம் எண் III
6. பழைய பாளையம் நகரமைப்புத்திட்டம்
7. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் VI

**II வரைவு நிலையில் உள்ள விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்:**

1. விரிவு அபிவிருத்தித்திட்டம் எண் I
2. விரிவு அபிவிருத்தித்திட்டம் எண் II
3. விரிவு அபிவிருத்தித்திட்டம் எண் III
4. விரிவு அபிவிருத்தித்திட்டம் எண் IV
5. விரிவு அபிவிருத்தித்திட்டம் எண் V
6. ஆண்டாள்புரம் நகரமைப்புத் திட்டம்

**1) அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள்:**

**1. இரயில்வே நிலையப் பகுதி நகரமைப்புத் திட்டம்**

இத்திட்டமானது இருப்புப் பாதைக்கு மேற்கும் தென்காசி சாலைக்கு கிழக்கும், டி.பி. மில்ஸ் சாலைக்கு தென்புறம் அசோக் திரையரங்குக்கு வடக்கே உள்ள பகுதியில் அமைந்துள்ளது. பொது சுகாதாரப்பிரிவு அரசானை எண் 50 நாள் 1.1.1932ல் அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. சுகாதார துறை அரசானை எண்.1756 நாள் 12.11.1940ன் படி இத்திட்டத்திற்கு திருத்தங்கள் பிறப்பித்த பின்னர் சுகாதார துறை அரசானை எண.302 நாள் 29.8.1960 பிரகாரம் மேற்படி திருத்தங்களை உறுதி செய்து உத்தரவிட்டுள்ளது. பின் அரசு தனது 25.7.69 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசானை எண் 1314 ல் பெரு வாரியாக சாலைகளை பொதுக் தெருவாக பிரகடனபடுத்தியுள்ளது. தற்பொழுது இடத்திலுள்ள கட்டிடங்களின் வளர்ச்சிக்கேற்ப திட்டத்தை புதுநிலைப்படுத்தும் பணிகள் நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (கு2.7243.99).

**2. இரயில்வே நிலையம் பகுதி இருப்புப் பாதைக்கு கீழ்புறம் உள்ள நகரமைப்புத் திட்டம்**

இத்திட்டப் பகுதி இருப்புப் பாதைக்கு கீழ்புறம் வட எல்லைக்கு தென்புறமும் சஞ்சீவி மலைக்கு மேல்புறமும் சத்திரப்பட்டி சாலைக்கு வடபுறமும் அமைந்துள்ள பகுதியாகும். இத்திட்டம் 18.6.59 ஆம் தேதிய ஊரகவளர்ச்சி உள்ளாட்சி துறை அரசாணை எண் 2041 படி அரசினரால் அங்கீகாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உள்ள ஏஏ, சிசி, மற்றும் எச்எச் சாலை நகர்மன்றத்தால் அமைக்க வேண்டிய சாலைகள் ஆகும். பிபி சாலை ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டது. சாலை இன்னும் அமைக்கப்பெறவில்லை. ஏஏ சாலையில் தெற்கே சத்திரப்பட்டி சாலையிலிருந்து வடக்கு மலையடிப்பட்டி பொது தெருவாக பிரகடனப்படுத்தப்பட்டு நகராட்சி பராமரிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டது. சிசி சாலை நகராட்சியால் சத்திரப்பட்டி சாலையிலிருந்து வடபக்கம் டிடி ரோடு வரை அமைக்கப்பட்டு விட்டது. எச்எச் சாலையும் அமைக்கப்பட்டு விட்டது. இதர தனியாரால் அமைக்கப்பட வேண்டிய சாலைகள் கட்டிட மனையாக உபயோகிக்க உட்படும் போது மனை உரிமையாளர்களால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 60 அடி அகல திட்டச்சாலை தற்போது நகர்மன்றத்தால் உலக வங்கி நிதி உதவியுடன் தார்ச்சாலையாக மாற்றி அமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் அமையும் 60அடி அகல ஏஏ சாலை மற்றும் 40 அடி அகல சிசி தார் சாலையாக அமைக்கும் பணிகள் முடிவடைந்துவிட்டது. தற்போது இடத்திலுள்ள கட்டிடங்களின் வளர்ச்சிக்கேற்ப திட்டத்தை புதுநிலைப்படுத்தும் பணிகள் நகர் ஊரமைப்புத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3. புதுப்பாளையம் நகரமைப்புத்திட்டம் எண; I**

இத்திட்டத்தின் பரப்பளவு 108.34 ஹெக்டேர் ஆகும். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 8.1.1981ம் தேதிய ந.க.4017/80/டி2 எண் செயலாணை கடிதத்தில் ஒப்புதல்

அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு 11 வருடங்களுக்கு மேலாகி விட்டபடியால் தற்பொழுது இத்திட்டத்தில் நில உபயோகத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது எனவே, தற்போது உள்ள வளர்ச்சியின் அடிப்படையில் புது நிலைப்படுத்த இந்நகர் மன்ற உள்ளூர் திட்டக்குழு தீர்மான எண் 19 நாள் 9.2.2000 படி 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 27 மற்றும் 33(1) மற்றும் (3) படி மறு ஆய்வு செய்து புது நிலைப்படுத்த நகர் ஊரமைப்புத் துறையினர் மூலம் பணிகள் மேறகொள்ளப்பட்டு வருகிறது.

### 4. புதுப்பாளையம் நகரமைப்புத்திட்டம் II

இத்திட்டத்தின் பரப்பளவு 19.45 ஹெக்டேர் ஆகும். அரசு தனது 15.12.69 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண்.2466 கீழ் இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு நீண்ட காலமாகி விட்டபடியால் தற்பொழுது இடத்திலுள்ள நில உபயோக மாற்றங்களின் அடிப்படையில் புதுநிலைப்படுத்தும் பணிகள் நகர் ஊரமைப்புத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (கோப்பு எண் 322/96).

### 5. புதுப்பாளையம் நகரமைப்புத்திட்டம் III

இத்திட்டத்தின் பரப்பளவு 14.45 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் அரசினரால் அங்கீகரிக் கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டபடியால் தற்பொழுது இடத்திலுள்ள வளர்ச்சிக் கேற்ப உள்ளூர் திட்டக்குழு தீர்மான எண் 781 நாள் 27.45.2003 படி ஒட்டு மொத்த திட்ட மாறுதலுக்கு ஒப்புதல் அளித்திடக் கோரி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தமது 20.10.2003 ஆம் தேதிய செயலாணை கடிதத்தில் ஒட்டு மொத்த திட்ட மாறுதலுக்காக ஒப்புதல் அளித்துள்ளதை தொடர்ந்து இத்திட்டம் தொடர்பான அறிவிக்கை விருதுநகர் மாவட்ட அரசிதழில் 26.2.2004 அன்று பாகம் ஏஜ பிரிவு 1 பக்கம் 46ல் பிரசுரம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை செயல்முறை உத்திரவு ந.க.எண் 19469-01டிபி2 நாள் 20.10.03 இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### 6. பழையபாளையம் அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் பரப்பளவு 24.17 ஹெக்டேர் ஆகும். இத்திட்டமானது நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 31.12.86 ஆம் தேதிய ந.க.எண் 32458/86 செயலாணையில் அங்கீகாரம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நீண்ட காலம் ஆகிவிட்டபடியால் தற்பொழுது இடத்திலுள்ள வளர்சிக்கேற்ப உள்ளூர் திட்டக்குழு தீர்மான எண்196 நாள் 7.5.99 படி ஒட்டு மொத்த திட்ட மாறுதலுக்கு ஒப்புதல் அளித்திடக்கோரி சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதில் நகர் ஊரமைைப்பு இயக்குநர் அவர்கள் தமது 7.3.2000 தேதிய ந.க.எண்.24600/99டிபி2 கடிதத்தில் கோரிய விபரங்களுக்கு நகராட்சியால் பி2-எப்1-2423-99

பதில் சமர்ப்பிக்கப்பட்டு இயக்குநர் அவர்களின் 25.5.2001 ஆம் தேதிய ந.க.எண்.24660/99டிபி2 எண் செயலாணைக் கடிதத்தில் ஒட்டு மொத்த திட்ட மாறுதலுக்கு ஒப்புதல் அளித்து உத்திரவு படிவம் 14 ஐ (Notification) 6.11.2003 அன்று ஒட்டி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஆட்சேபனை ஏதும் வரப்பெறாததால்அரசின் இறுதி ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அதன் பேரில் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் 30.1.08ம் தேதிய ந.க.எண்.13505.03 வீ- 2 எண் செயல்முறை உத்திரவுப்படி ஒட்டு மொத்த திட்ட மாற்ற இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டு மேற்படி உத்திரவினை விருதுநகர் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் வருகிறது.

**7. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் VI**

இந்த இடமானது சங்கரன்கோவில் சாலைக்கு தெற்கேயும் மேற்கேயும் புதுப்பாளையம் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 1 ல் வடபுறம் தென்காசி சாலைக்கு கிழக்கேயும் அமைந்த பகுதியாகும். இதன் பரப்பளவு 24.895 ஹெக்டேராகும் . நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தனது 6.11.92 தேதிய செயலாணை எண் 26876 ல் பிரசுரம் செய்துள்ளார். நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின் படி மறு பிரசுரம் செய்யப்பட்டு விட்டது. இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கால வரம்பு 31.3.93 வரை நீடித்து வழங்கப்பட்டது. கால வரம்பு நீடிப்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் 12.8.89 ம் தேதிய 1595/89 ல் பதிவு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் தனது 14.8.89 ஆம் தேதிய ந.க.எண் 2685/89 கடிதத்தில் வரைபடம் எண் 2 தயார் செய்து அனுப்பியுள்ளார்கள். நிலம் மற்றும் கட்டிடம் உரிமையாளர்களின் கூட்டம் 22.12.89 அன்று நடைபெற்றது. ஆலோசனைகள் பெறப்பட்டு உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண் 148 படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாற்றங்கள் மேற்கொள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் 13.5.91 ஆம் தேதிய ந.க.எண். 33338/89/டி.பி. கடிதத்தில் இத்திட்டத்திற்கு சட்டப்பிரிவு 25ன் கீழ் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மேற்படி விபரங்களை ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளுக்காக விதி 13ன்படி தமிழ்நாடு அரசிதழில் பாகம் 4 பிரிவு 1, பக்கம் 1030 ல் 16.12.91 அன்று பிரசுரம் செய்யப்பட்டு எவ்வித ஆட்சேபனையும் உரிய காலததில் வராததால் சட்டப்பிரிவு 28 ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இறுதி உத்தரவு பெற 9.3.92 ம் தேதிய உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் 218 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விதி 13ன் படியாக அறிவிப்புகள் 31.3.92 ஆம் தேதிய நாளிதழிலும் அனைத்து துறைத் தலைவர் அலுவலகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது. மேற்படி திட்டமானது திட்ட விதி (1)ன் படியும் திட்டப்பிரிவு 29 ன் படியும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ந.க. எண. 53338/டிபி2 நாள் 27.11.94 படி இறுதி அங்கீகாரம் பெறப்பட்டு மாநில மற்றும் மாவட்ட அரசிதழ்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. திட்ட உத்தேசத்திற் கேற்ப இடத்தில் வளர்ச்சியடைந்து வருகிறது.

**I ” வரைவு நிலையில் உள்ள விரிவு அபிவிருத்தித் திட்டம் ”**

**II விரிவு அபிவிருத்தி திட்டம் எண் I ( வரைவு நிலை )**

இத்திட்டம் நகராட்சியில் வடபுற எல்லைக்கு தெற்கேயும் சர்வே எண் 24 ல் உள்ள ஓடைக்கு வடபுறம் மதுரை சாலைக்கு மேற்கேயும் சர்வே எண் 65 ல் உள்ள ஓடைக்கு கிழக்கேயும் அமைந்த பகுதியாகும். இதன் பரப்பளவு 36.6090 ஹெக்டேர் ஆகும். நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் 6.11.82 தேதிய செயலாணை எண் 26876/82 படி பிரசுரம் செய்யப்பட்டது. நகர் ஊரமைப்பு திட்ட விதிகளின் படி மறு பிரசுரம் செய்யப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கால வரம்பு 1.3.93 வரை நீடித்து வழங்கப்பட்டது. கால வரம்பு நீடிப்பு பதிவு செய்யப்பட்டதுடன் மாவட்ட அரசிதழில் 26.8.89 அன்று மறு பிரசுரம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு துணை ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் திட்டப்பகுதிக்கு 23.3.89 அன்று வரைபடம் எண் 2 தயாரித்து அனுப்பியதின் பேரில் நிலம் மற்றும் கட்டிட உரிமையாளர்களின் கூட்டம் 20.9.89 அன்று கூட்டப்பட்டு ஆலோசனை பெறப்பட்டது. அதனை உள்ளூர் திட்டக்குழு தனது 28.11.89 ஆம் தேதிய 135 ஆம் எண் தீர்மானத்தில் அங்கீகரித்துள்ளது. மேற்படி பகுதிக்குரிய அட்டவனை 13.12.89 ஆம் தேதிய எப்1/6163/89 எண் கடித்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

மதுரை நகரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் 3.1.90 ஆம் தேதிய 5859/89 ஆம் எண் கடித்தில் விதி எண் 11 படி நகரமைப்பு இயக்குநரின் இசைவு கூறும் தீர்மானத்துடன் அனுப்பி வைக்கும்படி தெரிவித்துள்ளார்கள். உள்ளூர் திட்டக்குழு தனது 6.4.90 ஆம் தேதிய 154 ஆம் எண் தீர்மானத்தில் அட்டவனையில் திருத்தம் செய்ய தீர்மானித்துள்ளது. விதி 11 கீழ் இசைவு பெற கோரும் உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண் 160 நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு இவ்வலுவலக 6.6.90 ஆம் தேதிய ந.க.எண் 6169/89 ஆம் எண் கடிதத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. முழுமை திட்டத்தில் இத்திட்டத்தின்படி மாற்றங்கள் செய்ய வேண்டி உள்ளதற்கு முறையே 30.10.90 மற்றும் 30.11.90 ஆம் தேதியில் உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண் 171 மற்றும் 183 நிறைவேற்றி 3.12.90 அன்று நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர் இத்திட்டத்திற்கு நாளது தேதி வரை இணக்கம் அளிக்கவில்லை. நினைவூட்டுதல் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**2. விரிவு அபிவிருத்தி திட்டம் எண் II ( வரைவு நிலை )**

இத்திட்டமானது நகராட்சியின் எல்லைக்கு தென்புறமுள்ள மாடசாமி கோவில் தெருவிற்கு வடக்கேயும், மதுரை சாலைக்கு மேற்கேயும் அழகுதேவன் குளம் சாலைக்கு கிழக்கேயும் அமைந்துள்ள பகுதியாகும். அதன் பரப்பளவு 24.2329 ஹெக்டேர் ஆகும். நகர்

ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தனது 8.11.92 ஆம் தேதிய செயல்முறை ஆணை எண் 26875/82 படி பிரசுரம் செய்துள்ளார்கள். நகர் ஊரமைப்பு திட்ட விதிகளின் படி (கோப்பு எண் 15026/82) மறு பிரசுரம் செய்யப்பட்டு விட்டது. இத்திட்டதிற்கான கால வரம்பு 31.3.93 வரை நீடிக்கப்பட்டு கால வரம்பு நீட்டிப்பு பதிவு செய்யப்பட்ட உடன் 26.8.89 ஆம் தேதிய மாவட்ட அரசு இதழ்களிலும் மறுபிரசுரம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு விட்டது. மதுரை இணை இயக்குநர் அவர்கள் மேற்படி திட்டப்பகுதிக்கு 23.3.89 ஆம் தேதிய 1161 எண் கடிதத்தில் வரைபடம் எண் 1 தயார் செய்தும்; 28.7.89 ஆம் தேதி வரைபடம் எண் 2 ம் தயார் செய்தும், அனுப்பியதின் பேரில் நிலம், கட்டிடம், சொந்தக்காரர்களின் கூட்டம் 26.12.89 அன்று நடத்தப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டது. ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் உள்ளூர் திட்டக்குழு முன் வைக்கப்பட்டது. உள்ளூர் திட்டக்குழு தனது 11.1.90 ஆம் தேதிய 14-ஏ எண். தீர்மானத்தின் அட்டவனையில் கூறியபடி ஏற்றுக் கொள்வதாக தீர்மானித்துள்ளதை மதுரை துணை நகரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. திட்ட வரைபடத்தின் படி முழுமை திட்டத்தில் மாற்றங்கள் செய்ய உள்ளூர் திட்டக் குழுமம் தனது 30.10.90 ஆம் தேதிய 172 எண் தீர்மானத்துடன் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு 16.10.90 ஆம் தேதிய கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்கள் 29.11.96 ஆம் தேதிய 4615/96 எண் கடிதத்தில் மாற்றம் செய்ய அரசுக்கு உத்தேசம் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது என்றும் அரசிடமிருந்து விபரம் பெறப்பட்ட பின்னர் இத்திட்டத்திற்கு இணக்கம் அளிப்பது சம்மந்தமாக பரிசீலிக்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. விரிவு அபிவிருத்தி திட்டம் எண் III ( வரைவு நிலை )**

இந்த திட்டப்பகுதியானது மாடசாமி கோவில் தெருவிற்கு தெற்கேயும், புகைவண்டி நிலையப் பகுதி நகரமைப்பு திட்டத்திற்கு மேற்கேயும், முடங்கியார் சாலைக்கு வடக்கே மாணிக்கத்தான் கிணறு தெருவிற்கு கிழக்கேயும் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 74.301 ஹெக்டேர் ஆகும். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தனது 6.11.82 ஆம் தேதிய 26875/82 எண் செயலாணையில் பிரசுரம் செய்துள்ளார்கள். நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி (கோப்பு எண் 18026/82) மறு பிரசுரம் செய்யப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுவிட்டது. இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கால வரம்பு 31.3.93 வரை நீடித்து வழங்கப்பட்டு உள்ளது. கால வரம்பு நீடிப்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் 12.8.1989 ஆம் தேதியில் பதிவு எண் 1585/89 படி பதிவு செய்யப்பட்டும் மதுரை ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் இத்திட்டப் பகுதிக்கு வரைபடம் நிலை 2 அனுப்பி உள்ளார்கள். அதன் பேரில் நில சுவான்தார்கள் கூட்டம் 24.1.91 அன்று (உள்ளூர் திடடக்குழு தனது தீர்மானம் எண் 151 நாள் 30.11.90 தீர்மானத்து) கூட்டம் நடத்தப்பட்டு ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு பரிசீலித்து மேற்படி விபரங்கள் உடன் விதி 11ன் கீழ் இயக்குநர் அங்கீகாரம் பெற 1.2.91 ஆம் தேதிய 134 ஆம் தீர்மானம்

நிறைவேற்றப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இசைவு பெற இவ்வலுவலக 12.2.91 ஆம் தேதிய ந.க.எண் 4606/90 எண் கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. திட்டவரைபடம் முழுமை திட்டத்தில் மாற்றம் செய்ய அரசைக் கேட்டுக் கொள்ள உள்ளூர் திட்டக்குழு 5.2.91 ஆம் தேதிய 202 ஆம் எண் தீர்மானத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டு உள்ளது. உத்தரவு எதிர்நோக்கப்படுகிறது.

**4. விரிவு அபிவிருத்தி திட்டம் எண் IV ( வரைவு நிலை )**

இந்த திட்டப்பகுதியானது முடங்கியார் சாலைக்கு தெற்கேயும், புதுப்பாளையம் நகரமைப்புத்
திட்டம் எண் 2 க்கு வடபுறமும் தென்காசி சாலைக்கு மேற்கேயும் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 18.4744 ஹெக்டேர் ஆகும். நகர் ஊரமைப்பு இயக்குநரின் 6.12.89 ஆம் தேதிய நடவடிக்கை எண் 26875/82 படி பிரசுரம் செய்யப்பட்டுவிட்டது. நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின் படி மறு பிரசுரம் செய்யப்பட்டுவிட்டது. இத்திட்டத்திற்கு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் மாவட்ட அரசு இதழ்களில் மறு பிரசுரம் செய்யப்பட்டு நகரமைப்பு இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் மேற்படி பிரதேசத்திற்கு 28.7.89 ஆம் தேதிய 12.13-89 ஆம் எண் கடிதத்தில் வரைபடம் எண் 2 தயார் செய்து அனுப்பியுள்ளார்கள். நிலம் மற்றும் கட்டிட உரிமையாளர்களின் கூட்டம் 22.9.89 அன்று நடைபெற்றது. ஆலோசனைகள் பெறப்பட்டு உள்ளூர் திட்டக் குழு வின் முன் முடிவுக்கு வைக்கப்பட்டது. உள்ளூர் திட்டக்குழு தனது 16.4.90 ஆம் தேதிய 157 ஆம் எண் தீர்மானத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநரின் அங்கீகாரம் பெற தீர்மானித்து மேற்படி ஆலோசனை பட்டியல் இவ்வலுவலக 2.5.90 ஆம் தேதிய ந.க.எண் 10428/89 ஆம் எண் கடிதத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. துணை நகரமைப்பு இயக்குநர் அறிவுரையின் பேரில் உள்ளூர் திட்டக்குழுவின் 30.10.90 ஆம் தேதிய 173 ஆம் தீர்மானத்தின்படி நகர் ஊரமைப்பு இயக்குநரின் இசைவு கோரி கருத்துரு அனுப்பப்பட்டது. மதுரை துணை நகர் இயக்குநர் அவர்கள் தனது 7.1.91 ஆம் தேதிய 5858/89 ஆம் கடிதத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு இசைவு பெற அனுப்பியுள்ளார்கள். மேலே கண்ட திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள முழுமைத்திட்டம் புதுநிலைப்படுத்தப்பட்ட பின்னரே விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 4 மீதான இசைவிற்கு சமர்ப்பிக்கப்படுமென நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்கள் தெரிவித்துள்ளதாக ந.க.எண. 24981/96டிபி2 நாள் 5.6.97 ஆம் தேதிய கடிதத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**5. விரிவு அபிவிருத்தி திட்டம் எண் V ( வரைவு நிலை )**

இந்த திட்டப்பகுதியானது புகைவண்டி நிலைய நகரமைப்புத்திட்டத்திற்கு தெற்கேயும் இருப்புப் பாதைக்கு புதுப்பாளையம் நகரமைப்புத்திட்டம் 3 க்கு மேற்கேயும் சத்திரப்பட்டி

சாலைக்கு வடக்கேயும் தென்காசி சாலைக்கு கிழக்கேயும் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 52.136 ஹெக்டேர் ஆகும். இதனை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தனது 6.11.82 ஆம் தேதிய செயலாணை எண் 26875/82 படி பிரசுரம் செய்து உள்ளார்கள். நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின் படி மறு பிரசுரம் செய்யப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கால வரம்பு 31.1.93 வரை நீடித்து வழங்கப்பட்டது. கால வரம்பு நீடிப்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் 12.8.89 ஆம் தேதிய பதிவு எண் 1582/82 படி பதிவு செய்யப்பட்டும் 26.8.89 ஆம் தேதிய எண்ணிட்ட அரசிதழ்களிலும் மறு பிரசுரம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுவிட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடித எண் 7305-95 டிபி2 நாள் 5.6.97 கடிதத்தில் மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்நர் அவர்களுக்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 25 கீழ் கிடைப்பதற்குத் தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக் கொண்டுள்ளது.

**6. ஆண்டாள்புரம் நகரமைப்பு திட்டம் ( வரைவு நிலை )**

இத்திட்டமானது நகராட்சி எல்லைக்கு தெற்கு, மேற்கு, வடக்கு இராஜபாளையம் மில்ஸ் கிழக்கேயும் அமைந்த பகுதியாகும். இதன் பரப்பளவு 59.07 ஹெக்டேராகும். இதனை உள்ளூர் திட்டக்குழு தனது 3.7.89 ஆம் தேதிய 128 எண் தீர்மானத்தில் திட்டப்பகுதியாக பிரகடனப்படுத்த தீர்மானித்துள்ளது. நகரமைப்பு சட்ட விதிகளின் படி இத்திட்டம் மாவட்ட அரசிதழில் 26.8.90 அன்று பிரசுரிக்கப்பட்டு சார் பதிவாளர் அலுவலகத்தில் 23.9.89 அன்று பதிவு எண் 2585/89 ஆக பதிவு செய்யப்பட்டு உள்ளது. நில உரிமையாளர்களின் கூட்டம் 29.6.90 அன்று நடத்தப்பட்டு ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு ஆட்சேபனை ஆலோசனைகளின் பேரில் 23.7.90 ஆம் தேதிய உள்ளூர் திட்டக்குழு தீர்மான எண் 164 நிறைவேற்றப்பட்டு இவ்வலுவலக 30.7.90 ஆம் தேதிய ந.க.எண.4287/90 கடிதத்தின்படி விதி 11 கீழ் இசைவு பெற நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. முழுமைத்திட்டம் புதுநிலைப் படுத்தப்பட்ட பின்னர் இணக்கத்திற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்

## III முழுமைத்திட்டம்

அரசானை எண் 822 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 24.5.83 படி இராஜபாளையம் உள்ளூர் திட்டக் குழுமம் பகுதிக்கான முழுமைத்திட்டம் 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவின் படி முழுமைத்திட்டம் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் விதி 5ன் படியும் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் முழுமைத்திட்டம் பரப்பில், நில உபயோகத்தில் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. அதன் பேரில் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 32(2) படியும்; முழுமைத்திட்டம் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் விதி 5 படியும் முழுமைத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்பு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அதனை ‘புது நிலைப்படுத்த‘ வேண்டும் என்ற விதிமுறையின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்ட திருத்திய முழுமைத்திட்டத்திற்கு அரசின் இசைவு பெற

நகர் ஊரமைப்புச்சட்டம் 1971, பிரிவு 24(2) படியும் முழுமைத்திட்டம் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்தல் விதி 5 படியும் உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண் 122 நாள் 29.9.98ன் படி முழுமைத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு அரசின் இசைவு பெற 30.12.98 ல் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை, மண்டல துணை நகர் - ஊரமைப்பு இயக்குநர், மதுரை வழியாக அரசுச் செயலாளர், நகர்புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதித்துறை, சென்னைக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதில் அரசு தமது 18.8.99 ஆம் தேதிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ஆணை எண்.355ல் நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 24/2ன் படி இசைவு அளித்துள்ளது. அரசால் இணக்கம் அளிக்கப்பட்ட முழமைத் திட்டம் தொடர்பான அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் பக்கம் எண்.109 Part VI-Section 1ல் 29.3.2000 அன்று பிரசுரம் செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(அ). வரைகடப்புகள்**

அறிக்கையாண்டில் ஆணையாளரால் ஆக்கிரமிப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 9.12.98 ஆம் தேதிய நேர்முகக் கடிதம் எண் 18951/97/டிபி9ல் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள் மற்றும் சாலைகளில் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகள் அனைத்தும் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து அகற்றப்பட்டு வருகிறது. எனவே இந்த நிதியாண்டில் தற்காலிக ஆக்கிரமிப்புக் கட்டணம் எதுவும் வசூல் செய்யப்படவில்லை.

**(ஆ). சாலை ஓர கடைகள்:**

இந்நகராட்சியின் பொறுப்பிலுள்ள சாலைகளின் ஓரங்களில் 22 பெட்டிக்கடைகள் (Bunks) வைக்கப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டு குத்தகை புதுப்பித்து வரப்படுகின்றது. அறிக்கையாண்டில் இவற்றின் மூலம் வரவு ரூ.5240352/- ஆகும். சென்ற ஆண்டு வரவு ரூ64500/- ஆகும்.

**(இ). ஆக்கிரமிப்புகள்**

அறிக்கையாண்ழல் தற்காலிக ஆக்கிரமிப்பஜகள் மொத்தம் 27 எண்ணம் கண்டறியப்பட்டு. ஆக்கிரமிப்புகளை அகற்றிட நடவடிக்கையில் உள்ளது.

**37 இதர வருவாய் இனம் :**

**விளம்பர வரி :**

தமிழ்நாடு நகரப் பகுதியில் நகராட்சி மற்றும் தனியார் இடங்களில் செய்யப்படும் விளம்பரங்களுக்கு உள்ளாட்சி நிர்வாகத்தால் விளம்பர வரி வசூல் செய்வது மற்றும்

உரிமையாணை வழங்குவது தொடர்பாக 5.8.98 ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 141 ம் எண்ணிட்ட அரசாணையின் படியும் நகராட்சி நிர்வாக ஆணையரின் 17.8.98 ம் தேதிய ந.க. 43176/98/டிபி3 எண் கடிதத்தின் படியும் இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு, நகராட்சி மற்றும் தனியார் இடங்களில் செய்யப்படும் விளம்பரங்களுக்கு விளம்பரவரி மன்றத்தீர்மானம் எண் 728 நாள் 10.9.98 ல் நிர்ணயம் செய்யப்பட்டு, விளம்பர அறிக்கையினை மாவட்ட அரசிதழில் 26.8.99ம் தேதிய எண் 8 பக்கம் 101ல் பிரசுரம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அ.ஆ.எண் 47(ம) 48 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்)துறை நாள் 26.7.03 நகராட்சிகளில் விளம்பர பலகைகளுக்கு உரிமம் வழங்குவதற்கான அதிகாரம் நகராட்சி ஆணையாளர் அவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசாணையின்படி வசூல் செய்வதற்கு ஏதுவாக பட்டியல் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் விளம்பரக் கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை.

## VI. பொது வருவாய்

### 38. வருவாய் கணக்கு :

நகர்மன்ற தீர்மானம் எண்.290 நாள் 28.5.1999 பிரகாரம் 1.10.1999 முதல் கட்டடங்களுக்கு ஆண்டு மதிப்பின் பேரில் விதிக்கப்படும் சொத்து வரி 15 சதவீதத்திலிருந்து 21 சதவீதமாக உயர்த்தப்பட்டது. அதன் பின் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று 27.4.2000 தேதிய நகர்மன்றத் தீர்மான எண்.238 படி 21 சதவீதத்திலிருந்து 19மூ குறைக்கப்பட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 25.9.2000 தேதிய அரசாணை எண்.133ல் அனுமதி பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | பொது வகை காரியம் | 8% |
| 2. | குடிநீர் மற்றும் வடிகால் | 6% |
| 3. | துப்புரவுப் பணி | 2% |
| 4. | விளக்கு | 2% |
| 5. | கல்வி வரி | 1% |
| | மொத்தம; | 19% |

அறிக்கையாண்டில் வருவாய் கணக்கில் வரி வசூல் ரூ.888.56லட்சமாகும். வசூல 556.78 சதவீதம் ஆகும். இக்கணக்கின் நிதி நிலைமை திருப்திகரமாக உள்ளது. அறிக்கையாண்டில் வரி வசூல் பணியாளர்களின் ஊதிய செலவு ரூ 54.79 - லட்சமாகும்.

### 39 நிகழ்வு (Incidence):

சொத்துவரி விதிக்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை 49893 ஆகும். இதில் 42120 குடியிருப்பு ஆகும். 6096 வணிக கட்டடங்கள். 1022 தொழில்சாலைகளும் 382 அரசு கட்டடங்களுக்கும் நடப்பு ஆண்டு சொத்துவரி விதிக்கப்பட்டதில் கேட்பு ரூ137.94 லட்சம்.

சென்ற ஆண்டு நடப்பு கேட்பு ரூ750.62 லட்சம் ஆகும். வரி விதிப்புகளின் எண்ணிக்கை 896 அறிக்கையாண்டில் நகராட்சி பகுதியில் காலிமனை வரிவிதிப்புக்களின் எண்ணிக்கை 1300 காலி மனையின் பரப்பளவு11.22.கி.மீ.ஆகும். காலிமனை வரி நடப்பு கேட்பு ரூ.11.05 லட்சமாகும்.

நடப்பு ஆண்டு தொழில்வரி விதிக்கப்பட்ட வணிகர்களின் எண்ணிக்கை 1651 அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் எண்ணிக்கை 36 நடப்பு ஆண்டு தொழில்வரி கேட்பு ரூ.88.86 லட்சம் ஆகும். இதில் பணியாளர்களிடம் இருந்து வசூல் ரு.75.00லட்சம்.∴ நிறுவனங்களிடமிருந்து வசூல் ரு.37.47 லட்சம் பணியாளர் அல்லாத பிறர்களிடமிருந்து வசூல் ரு.4.35 லட்சம் ஆகும்.

**40. கேட்பு - வசூல் - நிலுவை :**

| விபரம் | கேட்பு ரூ.லட்சத்தில் | வசூல் ரூ.லட்சத்தில் | நிலுவை ரூ. லட்சத்தில் | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|
| சொத்துவரி | 1383.95 | 618.01 | 765.95 | 44.66 |
| தொழில் வரி | 117.71 | 85.45 | 32.26 | 72.60 |
| குடிநீர் வரி | 215.74 | 114.13 | 101.61 | 52.90 |
| வரி அல்லாத இனம் | 94.68 | 74.74 | 19.93 | 78.95 |

## VII. நிதிநிலைமை

**41. பொது :**

**i) கணக்குகளின் ஆரம்ப இருப்பும் முடிவிருப்பும் பின்வருமாறு:**

| | ஆரம்ப இருப்பு | வரவு | செலவு | முடிவிருப்பு |
|---|---|---|---|---|
| வருவாய் கணக்கு | 780.35 | 7103.25 | 7120.98 | 762.62 |
| குடிநீர் நிதி கணக்கு | 243.38 | 362.47 | 509.31 | 96.55 |
| கல்வி நிதி கணக்கு | 43.69 | 159.03 | 180.87 | 21.84 |
| மொத்தம் | 1067.42 | 7624.75 | 7811.16 | 881.01 |

**ii) மிகையாக மான்யம் பெற்றது :**

அறிக்கையாண்டில் மிகை மானியம் இல்லை.

**42. வருவாய் ஆதாரம் :**

இந்நகராட்சியில் வரி உரிமையாணை கட்டணங்கள் அரசு மான்யங்கள் உதவித் தொகை குத்தகை கட்டணங்கள், அரசு கடன்கள், கேளிக்கை வரி முதலியவைகள் முக்கிய வருமானம் ஆகும். வசூலிக்கப்பட்ட தொகையில் அதிக தொகை நகர அபிவிருத்தி வேலைகளுக்கும் மற்ற இயல்பான செலவுகளுக்கும் கடன்களை திருப்பி செலுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

**அரசு மான்யம் (சாதாரணம்) :**

| மான்ய விபரம் | வரவு (ரூ.லட்சத்தில்) | செலவு (ரூ.லட்சத்தில்) | மீதி (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| மாநில நிதி ஆணையம் | 1384.86 | 1384.86 | - |
| ஈமச்சடங்கு (B.C) | - | - | - |

**43. மூலதனச் செலவு :**

1. கடன் தொகையிலிருந்து செலவிடப்பட்டது --
2. அரசு மான்யத்திலிருந்து - 0 லட்சம்
3. மன்ற நிதியிலிருந்து - 0 லட்சம்

**44. கடன் :**

1. 1.4.2015 அன்று மொத்தம் நிலுவையாக உள்ள கடன்
2. அறிக்கையாண்டில் பெறப்பட்ட கடன் --
3. மொத்தக்கடன்
4. அறிக்கையாண்டில் திரும்ப செலுத்தப்பட்ட அசல்
5. அறிக்கையாண்டில் இறுதியில் செலுத்தப்பட்ட வட்டி
6. அறிக்கையாண்டில் இறுதியில் உள்ள கடன்

**45. முதலீடுகள் :**

முதலீடுகள் கணக்கில் ஆரம்ப இருப்பு ரூ.197.48 லட்சம். அறிக்கையாண்டில் முதலீடு செய்தது ரு.250.00லட்சம். அறிக்கையாண்டில் முடிவிருப்பு ரூ.447.48 லட்சம் ஆகும்.

**46. தணிக்கை :**

அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் 93 தணிக்கை ஆட்சேபனை பத்திகள் நிலுவையாக இருந்தன. அறிக்கையாண்டில் 2016-2017ம் வருட ஆண்டு கணக்கு மீதான தணிக்கை 09.08.2017 தொடங்கப்பட்டு அதன் அறிக்கை 31.03.2017ல் பெறப்பட்டது. பெறப்பட்ட அறிக்கையில் தடைப் பத்திகள் மொத்தம் 180 ஆகும்.

| வருடம் | பொது நிதி | குடிநீர் நிதி | கல்வி | தணிக்கை குறிப்பு | திட்டம் MUDF | நகராட்சி நகர்ப்புற மேம்பாட்டு நிதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | - | - | |
| 2015-16 | 58 | 29 | 6 | | - | |
| 2016.17 | 63 | 35 | 8 | 74 | - | |
| மொத்தம் | 121 | 64 | 14 | 74 | - | |

அறிக்கையாண்டில் 2016-2017ம் வருடத்திற்கான தணிக்கை கட்டணம்தொகை **ரூ.204978/– முழுவதும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டது.**

**47. கடன்பாடும் பெறுமானமும் :**

அறிக்கையாண்டின் இறுதியில் நகராட்சியின் பெறுமான மதிப்பு (Assets) கையிருப்புடன்ரூ.10938.10 லட்சமாகும். கொடுக்கப்படவேண்டிய தலைப்பில் (Liabilities) நிலுவையாக உள்ள சம்பளம், பட்டியல்கள், மற்றும் மாற்றம் செய்யக்கூடிய தொகை ரூ-412.38 லட்சமாகும்.

**48. பொது :**

இந்நகராட்சியில் அரசினரால் அவ்வப்போது அமுல்படுத்தப்படும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**அ)தேசிய மகப்பேறு உதவித் திட்டம்:**

2017-18ம் ஆண்டில் இத்திட்டம் நகராட்சி பொது சுகாதாரத் துறையிலிருந்து வட்டார மருத்துவ அலுவலா் ஆரம்ப சுகாதார நிலையம் ஜமீன் கொல்லங்கொண்டானுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) ஈமச்சடங்கு மான்யம் :**

2017-2018 ஆண்டில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு ஈமச்சடங்கு மான்யம் வழங்குவதற்காக அரசிடமிருந்து மான்யத்தொகை வரப்படவில்லை.

**(இ). சிறுசேமிப்பு திட்டம் :**

விருதுநகா் மாவட்ட ஆட்சியா் அவா்களால் அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் கீழ் நிா்ணயிக்கப்பட்ட இலக்கு ஏதும் இல்லை

**49. முடிவுரை:**

நகா்மன்றம் மற்றும் ஆணையரிடையே நல்லுறவு இருந்து வந்தது. மேலும் நிா்வாகம் நல்ல முறையில் நடைபெற நகராட்சி பொறியாளா் நகரமைப்பு அலுவலா், வருவாய் அலுவலா் மேலாளா் மற்றும் அனைத்து அலுவலா்களும் பணியாளா்களும் ஆணையாளா் அவா்களுடன் சுமூகமாக நல்லுறவு கொண்டு, ஒத்துழைப்பு நல்கியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி ஆணையாளா்,
இராஜபாளையம்.